தினக்குரல்

யாழ் தினக்குரல் THINAKKURAL

AN INDEPENDENT DAILY VOICE IN TAMIL

Registered in the Department of Posts of Sri Lanka under No QD/149/NEWS/2021 www.thinakkural.lk yarlthinakkural@gmail.com

ஓசை : 020 குரல் : 276 புதன்கிழமை 15 டிசம்பர் Wednesday 15th December 2021. Post Box: 30 Phone: 021-7388301 Fax:021-7388304 விலை 30/= பக்கங்கள் : 12

4ஆவது தடுப்பூசியும் ஏற்ற வேண்டி வரும்?

நான்காவது கொரோனா தடுப்பூசியையும் எதிர்காலத்தில் ஏற்றுவதற்கான வாய்ப்புள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளரான வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக, பொதுமக்கள் தடுப்பூசி அட்டையை இயன்றளவு கவனமாக பயன் பக்கம் 02

இழப்புகளுக்கு காப்புறுதி லிட்ரோ நிறுவனம் முடிவு

க.பிரசன்னா

லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் எரிவாயு சிலிண்டர்களை பயன்படுத்தும் வாடிக்கையாளர்களுக்கு எரிவாயு பயன்படுத்துகையில் ஏற்படும் விபத்துக்களினால் ஏற்படும் இழப்புகளுக்கு ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான காப்பு பக்கம் 02

மேலும் இறக்குமதி கட்டுப்பாடு?

நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாடு காரணமாக இறக்குமதிகளை மேலும் கட்டுப்படுத்த வேண்டியிருக்குமென நிதிய மைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

திங்கட்கிழமை இரவு இடம் பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது இதனைத்தெரிவித்த அமைச்சர், எவ்வாறாயினும் எரிபொருள், மருந்துப் பொருட்கள், அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் கைத்தொழில்களுக்கு தேவைப் படும் மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று கூறியுள்ளார்.

நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாடு காரணமாக இறக்குமதிகள் மேலும் மட்டுப்படுத்தப்பட வேண்டும்அதேவேளை டொலர் பற்றாக்குறையை சமாளிக்க இந்தியா, ஜப்பான், சீனா உள்ளிட்ட நட்பு நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படுகிறது. அந்நாடுகளிடம் இருந்து சாதகமான பதில் பக்கம் 02

செலான் வங்கியிடமிருந்து

நிலையான வைப்புகளிற்கு உயர்ந்த வட்டி வீதம்

வைப்புக்காலம்	வருடாந்தவட்டி	AER (வ.வி.வ)
6 மாதம்	5.50%	5.58%
12 மாதம்	6.50%	6.50%

மேதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது 0112008888 ஐ அழைக்கவும்

Brand Finance Rating "A +" Fitch Rating. "A" (lka)'
கம்பனிப் பதிவிலக்கம் PQ 9 இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி

செலான் வங்கி

13-ஐ தீர்வாக ஏற்போர் பச்சைத் துரோகிகள்

-கஜேந்திரகுமார் கூறுகிறார்-

தமிழ் மக்களை ஒற்றையாட்சிக்குள் முடக்க நினைக்கும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் உருவான 13-ஆவது திருத்தத்தை தமிழர்களுக்கான தீர்வாக நாம் ஒருபோதும் ஏற்க மாட்டோம் என அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்.காங்கேசன் துறை வீதியில் அமைந்துள்ள கட்சித் தலைமை அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார். பக்கம் 02

சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வதா?

-அமைச்சரவையில் இருவேறு நிலைப்பாடுகள்-

ந.ஜெயகாந்தன்

சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வது தொடர்பாக அமைச்சரவை கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட போது இரு வேறுபட்ட நிலைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டதால் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமைக்கு தீர்வு காண்பதற்காக பக்கம் 02

வீடு புகுந்து பெண்கள், சிறுவன் மீது ஊர்காவற்றுறை பொலிஸார் தாக்குதல்

-இரு பெண்கள் காயம்; -மதுபோதையில் அட்டகாசம் என முறைப்பாடு

ஊர்காவற்றுறை - நாரந்தனை வடக்கு, தம்பாட்டி பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் மது போதையில் நுழைந்த பொலிஸார், வீட்டில் இருந்த பெண்கள் மற்றும் 17 வயது மாணவன் ஒருவரை சரமாரியதாகத் தாக்கி பெரும் அட்டகாசத்தில் ஈடுபட்டதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் பாதிக்கப்பட்டவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸாரின் தாக்குதலில் ஒன்றரை வயதுக்குக் குழந்தையின் தாய், பல்கலைக்கழக மாணவி ஆகியோர் பலத்த பக்கம் 02

யாழ். மாநகர சபையின் வரவு-செலவுத் திட்டம் இன்று

-நிறைவேறுமா? கவிழ்க்கப்படுமா?

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை இன்று புதன்கிழமை மாநகர முதல்வர், சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் முன்வைக்கவுள்ளார்.

வரவு-செலவுத் திட்டம் பொதுமக்கள் பார்வைக்காக வெளியிடப்பட்ட நிலையில் இன்று சபைக்கு வருகிறது.

இந்த வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவளிப்பதில்லை என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு முடிவெடுத்துள்ளதாக தெரியவருகிறது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அதே நிலைப்பாடுடன் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டாலும் இன்று சபை நடவடிக்கையின் போது தமது கட்சியின் முடிவை அறிந்து கொள்ளுமாறு அதன் தலைவர், நாடாளுமன்ற பக்கம் 03

தரமற்ற திரவ நைட்ரசன் உரமே வெடிப்பிற்கு காரணம்

-பேராதனை விவசாய பீடப் பேராசிரியர் மாரம்பே

க.பிரசன்னா

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட திரவ நனோ நைட்ரஜன் உரமானது தரமில்லாதமையே உரக் கான்கள் வெடிப்பிற்கு காரணமாகுமென பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் புத்தி மாரம்பே தெரிவித்துள்ளார்.

உர கான்கள் சிறப்பான தரத்தை பின்பற்றி தயாரிக்காமையினாலேயே வெடிப்பு ஏற்படுவதால் அதற்கு திரவ உர உற்பத்தியாளர்களே பொறுப்பு கூறவேண்டும். பக்கம் 02

சிலரின் சுயநலனுக்காக யாழ்.மாநகர சபையை கலைக்க நினைப்பது ஆபத்து

-யாழ்.மக்களின் நலனை பாதிக்கும் - விக்னேஸ்வரன்-

வெறும் கட்சி சார்பான முரண்பாடுகளால் யாழ். மாநகர சபை பாதீட்டை தோற்கடித்து ஒரு தகுதி வாய்ந்த நகர பிதாவை இழக்க நாங்கள் இடம் அளிக்கக்கூடாது என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத் திட்டத்தை தோற்கடிப்பதால் நகரபிதா வி.மணிவண்ணனை வெளியேற்றலாம் என்ற எண்ணத்தில் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதை நான் அறிவேன். மக்கள் பிரதிநிதிகள் தங்கள் சொந்த நலன் பக்கம் 02

பேஸ்புக் கவிதையால் ஒரு வருட சிறை வாசம்

-திருமலை இளைஞனுக்கு நேற்று பிணை-

மாவீரர் தினத்தை முன்னிட்டு, கவிதை ஒன்றினை தமது பேஸ்புக் பக்கத்தில் பதிவேற்றியமைக்காக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞனுக்கு ஒரு வருடத்திற்குப் பின்னர் திருகோணமலை மேல் நீதிமன்றம் நேற்று பிணை வழங்கியுள்ளது.

மூதூர் - சம்பூர் 2-ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பாலகிருஸ்ணன் ரதிகரன் என்ற 28 வயது இளைஞனுக்கே ஓராண்டின் பின்னர் பிணை கிடைத்துள்ளது.

குறித்த இளைஞன் மாவீரர் தினத்தை முன்னிட்டு கவிதை ஒன்றினை தமது பேஸ்புக் பக்கத்தில் பதிவேற்றியமைக்காக கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பக்கம் 02

பருத்தித்துறை வைத்தியசாலையில் வெடித்து சிதறிய எரிவாயு அடுப்பு

-துன்னாலையில் வெடித்து பெண் காயம்-

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் சமையல் அறை மற்றும் வீடொன்று உட்பட இரு இடங்களில் நேற்று காஸ் அடுப்பு வெடிப்பு சம்பவங்கள் இடம் பெற்றன.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் சமையல் அறையில் பயன்படுத்தப்பட்ட காஸ் பக்கம் 02

6மாதங்களில் 3 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு தடுப்பூசி அறிமுகம்

இன்னும் 6 மாதங்களில் 3 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு கொரோனா தடுப்பூசி அறிமுகம் செய்யப்படும் எனஇந்தியாவின் சீரம் நிறுவனம் தெரிவித்துள்ளது.

பாரத் பயோடெக் நிறுவனத்தின் 'கோவாக்சின்' மற்றும் சைடஸ் கடிலா நிறுவனத்தின் 'சைகோவ் - டி' ஆகிய குழந்தைகளுக்கான கொரோனா தடுப்பூசிகளின் பரிசோதனை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 'கோவிஷீல்டு' தடுப்பூசியை தயாரித்து வரும் சீரம் இந்தியா நிறுவனம் 'கோவோவாக்ஸ்' என்ற குழந்தைகளுக்கான தடுப்பூசியை தயாரித்துள்ளது. இதை, 12 - 18 வயது வரையி பக்கம் 02

எரிபொருள் இறக்குமதியில் 'டொலரால் நெருக்கடி'

ந.ஜெயகாந்தன்

நாட்டில் நிலவும் டொலர் பற்றாக்குறையால் எரிபொருள் இறக்குமதியில் நெருக்கடி நிலைமை ஏற்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிரதமர் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில கருத்து வெளியிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன .

எரிபொருள் இறக்குமதிக்காக 420 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என்று அமைச்சர் கம்மன்பில அதன்போது குறிப்பிட்டுள்ளதுடன், எதிர்வரும் மாதங்களில் எரிபொருள் இறக்குமதியின் போது பல்வேறு நெருக்கடி நிலைமைகள் ஏற்படலாம் என்று பக்கம் 02

லிட்ரோ நிறுவனத்திற்கு நீதிமன்றம் இன்றுவரை வரை கால அவகாசம்!

எரிவாயு சிலிண்டர்களின் கலவையை இன்று காட்சிப்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து நீதிபதிகள் குழாமிற்கு விளக்கமளிக்குமாறு லிட்ரோ காஸ் லங்கா லிமிடெட் நிறுவனத்திற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

லிட்ரோ மற்றும் லாஃப்ஸ் எரிவாயு நிறுவனங்களால் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ள எரி பக்கம் 02

எரிவாயு வெடிப்பினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் இலவச சட்டஉதவி

-எதிர்க்கட்சித் தலைவர் சஜித்-

நாடு முழுவதும் எரிவாயு வெடிப்பினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் ஐக்கிய மக்கள் சக்தி இலவச சட்ட உதவியை வழங்கும் என்றும் அதற்காக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் தயாராக உள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தரம் இல்லாத அரசாங்கத்தைக் கொண்ட நாட்டில் தரமான எதையும் எதிர்பார்க்க முடியாது என்றும் தரமற்ற ஆட்சியை அகற்றுவதே மேற்கொள்ள வேண்டிய விடயம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் கூறியுள்ளார். பக்கம் 02

13ஐ தீர்வாக ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

30 வருடங்களுக்கு மேலாக நடைமுறைப்படுத்த முடியாத 13ஆம் திருத்தத்தை சிலர் தமது எஜமான் களைத் திருப்திப் படுத்துவதாக ஏற்க முயல்கிறார்கள். இதன்மூலம் தமிழ் மக்களுக்கு ஒற்றையாட்சி தீர்வை திணிக்க முயற்சிக்கின்றனர்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்கு தமிழ் மக்களிடம் இருந்து ஆதரவு பெருகி வரும் நிலையில் அதற்கு முன்னதாக ஒற்றையாட்சியின் கீழ் தமிழ் மக்களை கட்டுப்படுத்துவதற்கு கூட்டமைப்பினர் மற்றும் விக்னேஸ்வரன் அணியினர் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

இந்தியா 13-ஆவது திருத்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதில் உறுதியாக நிற்கும் நிலையில் அண்மையில் யாழ்ப்பாணம் வந்த வெளியுறவுச் செயலாளரும் 13 தான் தமிழ் மக்களுக்கு தீர்வு சில மாற்றங்களை செய்யலாம் எனவும் கூறியிருந்தார்.

சம்பந்தனும் இந்தியா வலியுறுத்துகின்ற 13ஆவது திருத்தத்தை நாம் ஏற்றாக வேண்டும் என்ற நிலைப்பாட்டிலே உள்ளார்.

13-ஆவது திருத்தத்தை தமிழ் தரப்புகள் சில ஆதரிப்பதன் மூலம் சீனாவை விட்டு வாருங்கள் நாட்டை ஒற்றையாட்சிக்குள் ஆளலாம் என்ற செய்தி சிங்கள மக்களுக்கு சொல்லப்படுகிறது எனவும் கஜேந்திரகுமார் கூறினார்.

தமிழர் தரப்பு இப்போதாவது சமஷ்டியை பற்றி பேசவேண்டும் ஒற்றையாட்சியை எதிர்க்கிறோம் என கூற வேண்டும்.

இலங்கை அரசாங்கம் ஒற்றையாட்சியை கொண்டு வந்தால் எதிர்ப்போம் என கூறுவோர் 13 மூலம் இந்தியா கொண்டுவரும் ஒற்றை ஆட்சியை ஆதரிக்கிறார்கள். இத்தகையோர் பச்சைத் துரோகிகள்.

மக்கள் துரோகிகள் தொடர்பில் விழிப்பாக இருக்க வேண்டும் அவர்களை அரசியல் அரங்கிலிருந்து வெளியேற்றாவிட்டால் அதன் பிரதி பலன்களை மக்களே அனுபவித்துக் கொள்ள வேண்டும் எனவும் கஜேந்திரகுமார் தெரிவித்தார்

மேலும் விக்னேஸ்வரனுக்கு இன்னும் அரசியல் அனுபவம் போதாது எனவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியுள்ளார். 13-ஆவது திருத்தத்தை வலியுறுத்தும் மனோ கணேசன் மற்றும் ரவூப் ஹக்கீம் ஏற்கனவே ஒற்றையாட்சியை ஏற்று செயற்படுபவர்கள்தான் தான் எனவும் அவர் குறிப்பிட்டார்

பதின்மூன்றாம் திருத்தம் தொடர்பில் இந்தியாவுக்கு அழுத்தத்தை கொடுப்போம் என கூடிய தமிழ் கட்சிகளில் கூட்டத்தில் விக்னேஸ்வரனும் பங்கெடுத்துள்ளார்.

அதன்பின் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது உண்மையை அவரே தன் வாயால் போட்டு உடைத்து விட்டார். இலங்கையில் இந்தியாவுக்கு இருக்கும் ஒரே பிடி 13-ஆவது அரசியல் அமைப்புதான். அதனை நீக்குவதற்கு நாம் அனுமதிக்க முடியாது என அவரே வெளிப்படையாக கூறியிருந்தார். புதிய அரசியலமைப்பு வேண்டாம். இருக்கிற 13 ஐ பாதுகாப்போம் என்ற நிலைப்பாட்டில் அவர் இருக்கிறார் என எமக்குத் தெளிவாக விளங்குகிறது.

மனோ கணேசன் மற்றும் ஹக்கீம் ஒற்றையாட்சியின் கீழ் செயற்படுபவர்கள் அவர்களின் அரசியல் வேறு வட,கிழக்கில் தமிழ் மக்களுடைய அரசியல் வேறு. அதை அவர்கள் தெளிவாக விளங்கி இருப்பார்கள் எனவும் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

ஆனால் 13 ஐ வலியுறுத்தும் கூட்டத்தில் அவர்கள் பங்கேற்றமை எமக்குக் கவலை அளிக்கிறது.

நான் பாதுகாப்பு அமைச்சின் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் ஒற்றை ஆட்சி தொடர்பில் தெளிவாக கூறிய போது மனோ கணே சன் என்னைப் பாராட்டினார்.

நாங்கள் தெற்கில் சிங்களவர்களோடு சேர்ந்து அரசியல் செய்கிறவர்கள்: இதைப்பற்றி பேச முடியாது. நீங்கள் தெளிவாகப் பேசியது நல்லது என்றார்.

அதேபோன்று ஹக்கீம் முஸ்லிம்களின் பெருந்தலைவர் அஸ்ரப்புக்கு பின்னர் ஆளுமை உள்ள தலைவராக செயற்பட்டு வருகிறார்.

ஒற்றை ஆட்சியினால் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டு வரும் நிலையில் அதனை உணர்ந்து அவர் செயற்படுவார் என நம்புகிறேன்.

தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையே சில சிக்கல்கள் இருக்கலாம். அதனை நாம் பேசித் தீர்க்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

13-ஆவது திருத்தம் தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒற்றையாட்சியின் கீழ் வாழ்வதற்கான சூழலை உருவாக்கும். இதனை தமிழ் - முஸ்லிம் அரசியல்வாதிகள் உணர்ந்து செயற்படுவார்கள் என நம்புகிறேன் எனவும் கஜேந்திரகுமார் மேலும் தெரிவித்தார்.(ச-75)

4ஆவது தடுப்பூசியும் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தடுப்பூசி அட்டையை தரவு களஞ்சியத்திற்கு உள்வாங்கி, கிகீ கோட் முறைமைக்குள் இணைத்து, கைத்தொலைபேசி ஊடாகவோ அல்லது வேறு முறைமையிலோ பயன்படுத்தும் வரையில், அதனைப் பாதுகாப்பாக வைத்திருப்பது கட்டாயமாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் எதிர்காலத்தில், மூன்றாம் தடுப்பூசியின் பின்னர், நான்காம் தடுப்பூசியையும் வழங்கவேண்டி ஏற்படலாம் என்றும் எனவே, தடுப்பூசி அட்டையை லெமினேட் செய்வதை தவிர்க்க வேண்டும் எனவும் அவர் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார்

லிட்ரோ நிறுவனத்திற்கு ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாயு சிலிண்டர்களை மீளப் பெற உத்தரவிடுமாறு கோரி சிவில் சமூக செயற்பாட்டாளர் நாகாநந்த கொடித்துவக்கு தாக்கல் செய்த ரிட் மனு நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது போது இந்த கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

நீதிபதிகள் ருவன் பெர்னாண்டோ, சம்பத் விஜேரத்ன ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த மனுநேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எரிவாயு சிலிண்டரின் கலவை, அந்த கலவை சிலிண்டரில் தென்படும் சாத்தியக்கூறுகள் மற்றும் தற்போது சந்தைக்கு வெளியிடப்பட்டுள்ள எரிவாயு சிலிண்டர்களை திரும்பப் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளதா என நீதிபதிகள் குழாம் இதன்போது பிரதிவாதிகளிடம் வினவினர்.

இதன்போது லிட்ரோ எரிவாயு நிறுவனம் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ஹர்ஷ அமரசூரிய, இந்த விடயம் தொடர்பாக தனது கட்சிக்காரரிடம் கேட்டறிந்து சமர்ப்பணங்களை முன்வைக்க நாளை இன்று வரை கால அவகாசம் வழங்குமாறு நீதிமன்றில் கோரியிருந்தார்.

இதன் பிரகாரம், மனுமீதான விசாரணையை மீண்டும்இன்று எடுத்துக் கொள்வதற்கு மன்று உத்தரவிட்டது.

சிலரின் சுயநலனுக்காக ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு, விருப்பு வெறுப்புகளுக்கு முதலிடம் கொடுப்பதால் தான் இவ்வாறான சிந்தனைகள் மேலோங்குகின்றன. யாழ்.மக்களின் நலன் பற்றியோ, வருங்காலம் பற்றியோ சிந்திக்காது எடுக்கப்படும் நடவடிக்கைகள் பாரிய பின் விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மணிவண்ணன் எங்கள் கட்சி உறுப்பினர் அல்ல. ஆனால் அவர் மக்கள் சேவை செய்வதில் ஆர்வம் கொண்டவர். தமிழ் மக்கள் சிந்தனையை தகுந்த விதத்தில் உள் நாட்டவர்களிடமும் வெளி நாட்டவர்களிடமும் கொண்டு செல்லக் கூடியவர். அவரின் திறனும் அறிவும் ஆற்றலும் ஆளுமையும் மற்றைய உறுப்பினர்கள் எத்தனை பேரிடம் இருக்கின்றது? என்பதை உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். வெறும் கட்சி சார்பான முரண்பாடுகளால் ஒரு தகுதி வாய்ந்த நகர பிதாவை இழக்க நாங்கள் இடம் அளிக்கக்கூடாது.

இந்தக் கால கட்டம் நெருக்கடி மிக்கது. அறிவு, ஆளுமை, அதிகாரம் கொண்டவர்களை நாங்கள் பதவி இழக்கச் செய்தோமானால் அரசாங்கத்தின் கரவான நடவடிக்கைகளைக் கண்டிக்க முடியாமல் போய்விடும். எனக்கு மணிவண்ணனைத் தனிப்பட்ட முறையில் அதிகம் தெரியாது. ஆனால் அவரின் செயல்கள் பேச்சுக்கள் அவரை எனக்கு அடையாளப் படுத்தியுள்ளன. தயவு செய்து பதவியில் இருக்கும் நகரபிதாவை கட்சிக் காரணங்களுக்காக வெளியேற்றாதீர்கள் என்று சகல யாழ்.மாநகர சபை உறுப்பினர்களிடமும் அன்பான கோரிக்கை ஒன்றை முன் வைக்கின்றேன் எனவும் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.(ச-40)

வீடு புகுந்து ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயமைடைந்து ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சனிக்கிழமை இரவு இடம்பெற்ற இத்தாக்குதல் சம்பவம் குறித்து வீடியோ, புகைப்படங்கள் உள்ளிட்ட ஆதாரங்களுடன் தாக்கப்பட்ட பெண்களின் தாயார் மற்றும் கிராம மக்கள் இணைந்து நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளனர்.

பொலிஸாரால் தாக்கப்பட்டு காயமடைந்த பெண்களின் தாயார் அளித்துள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சனிக்கிழமை மாலை 6 மணியளவில் எனது வீட்டில் இரு பெண் பிள்ளைகளுடன் நான் இருந்தேன். அப்போது 3 மோட்டார் சைக்களிகளில் 6 பேர் வந்து எனது வீட்டை சுற்றிவளைத்தனர். எவரையும் வெளியே செல்ல அனுமதிக்கவில்லை.

என்ன பிரச்சினை எனக் கேட்டபோது முதலில் குடும்ப அட்டையை எடுக்குமாறு அவர்கள் கூறினர்.

பின்னர் யாரோ ஒருவர் கடலில் இருந்து மோட்டர் ஒன்றைத் தூக்கிக் கொண்டு ஓடிவிட்டதாகத் தெரிவித்தனர். அதன்பின் சிறிது நேரத்தில் ஊர்காவற்றுறை நீதிமன்றிலிருந்து ஒருவர் தப்பியோடிவிட்டதாகத் தெரிவித்தனர். அதன் பின்னரே தாங்கள் ஊர்காவற்றுறை பொலிஸார் என அவர்கள் கூறினர். அதன் பின்பே அவர்கள் பொலிஸார் என எங்களுக்குத் தெரியவந்தது.

இந்தச் சம்பவம் இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது வீட்டுக்கு வந்த எனது மருமகன் எனது 17 வயது மகனை மேலாடை இன்றி கையில் விலங்கிட்டு பொலிஸார் வீதியில் வைத்திருப்பதாக கூறினார். நான் ஓடிச் சென்று எனது மகனை ஏன் விலங்கிட்டு வைத்திருக்கிறீர்கள்? எனக் கேட்டேன். அதற்கு எந்தப் பதிலும் கூறாத பொலிஸார், கெட்ட வார்த்தைகளை பயன்படுத்தி என்னையும் எனது பெண் பிள்ளைகளையும் திட்டினர். இதன்போது எனது மகன் மற்றும் அவரை ஏன் அடிக்கிறீதுகள் ? எனக் கேட்ட வேறு இருவரையும் பொலிஸார் சரமாரியாகத் தாக்கி வாகனத்தில் ஏற்றினர். பின்னர் வாகனத்துக்கு அருகில் சென்ற யாழ்.பல்கலைக்கழக மாணவியான எனது மகளை அடித்து, வீதியில் இழுத்து விழுத்தினர்.

எனது மற்றொரு மகளான ஒன்றரை வயதுக்கு குழந்தையின் தாயையும் பொலிஸார் கட்டையால் அடித்து வீதியில் விழுத்தினர். இதில் இருவரும் காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரையும் ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் அனுமதித்துவிட்டு நானும் எனது கணவரும் பொலிஸ் நிலையம் சென்று எனது மகனை ஏன் கைது செய்தீர்கள்? என்று கேட்டோம். அதற்கு என்னையும் என் கணவரையும் தகாத வார்த்தைகளால் திட்டினர். பின்னர் எனது ஏனைய இரண்டு மகன்களையும் பொலிஸ் நிலையம் அழைத்துவந்து ஒப்படைத்தால் மட்டுமே கைது செய்த மகனை விடுவிப்பதாக கூறினர். நாங்கள் செய்வதறியாது வீடு திரும்பிவிட்டோம்.

பின்னர் இரவு 11 மணியளவில் எனது மகன் மற்றும் இருவரை முகக் வசம் அணியவில்லை என்ற குற்றச் சாட்டை பதிவு செய்து பிணையாளிகள் மூலம் விடுவித்தனர்.

சுமார் ஒரு மாதத்துக்கு முன்பும் ஊர்காவற்றுறை பொலிஸார் மாலை நேரம் வீட்டுக்கு வந்து என்னை அச்சுறுத்தினர். எனது வீட்டுக்கு வந்து தாக்குதல் நடத்திய பொலிஸார் அனைவரும் மதுபோதையில் இருந்தனர் எனவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)

பருத்தித்துறை ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுப்பு நேற்று வெடித்தது. எனினும் இதில் எவருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை.

அதேபோல் துன்னாலை வடக்கைச் சேர்ந்த ஒருவரது வீட்டிலும் காஸ் அடுப்பு வெடித்தது. இதில் சமையலில் ஈடுபட்டிருந்த பெண் சிறு காயத்துடன் தப்பினார். வீட்டின் லெவல் சீற்றும் இதன்போது உடைந்துள்ளது.

கடந்த 11ஆம் திகதியே தாம் புதிதாக காஸ் கொள்வனவு செய்ததாக சம்பவம் இடம்பெற்ற வீட்டார் தெரிவித்தனர். இந்த வெடிப்புச் சம்பவங்கள் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ச-21,44,75,40)

எரிபொருள் இறக்குமதியில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டிக்காட்டியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை கெரவலப்பிட்டி 'யுகதனவி' அனல் மின்நிலையம் தொடர்பான அமெரிக்க நிறுவனத்துடனான ஒப்பந்தம் இந்த வாரம் அமைச்சரவைக்கு முன்வைக்கப்படும் என்று முன்னர் கூறப்பட்டிருந்த போதும், அது அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

தற்போது ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச வெளிநாட்டு பயணமொன்றை மேற்கொண்டுள்ளதால், அவர் நாடு திரும்பிய பின்னர் அந்த ஒப்பந்தம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்று அந்தக் கூட்டத்தில் கூறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எரிவாயு வெடிப்பினால் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரமற்ற உர இறக்குமதியினால் நாடு பெரும் பேரழிவிற்குள் தள்ளப்பட்டுள்ளதாக கூறிய எதிர்க்கட்சித் தலைவர்,நாட்டின் பொருளாதாரத்தையும், விவசாய சமூகத்தின் வாழ்க்கையையும் அரசாங்கம் ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது என்றும் கூறியுள்ளார்.

பேஸ்புக் கவிதையால் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

27 ஆம் திகதி பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு திருகோணமலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இது தொடர்பான வழக்கு திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகம் இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, குறித்த இளைஞனை ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் செல்ல அனுமதியளித்து நீதிபதி உத்தரவிட்டார்.(ச)

இழப்புகளுக்கு ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றுதியினை வழங்குவதற்கு லிட்ரோ நிறுவனம் தீர்மானித்துள்ளது.

நாட்டில் கடந்த சில மாதங்களாக லிட்ரோ எரிவாயு சிலிண்டர்களில் ஏற்படுகின்ற எரிவாயு கசிவின் காரணமாக பல்வேறு விபத்துச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எரிவாயுவினை பயன்படுத்தும் வாடிக்கையாளர்களுக்கு எரிவாயு விபத்தின் மூலமான உயிரிழப்பு, உடற் காயங்கள் மற்றும் சேதங்களுக்கு காப்புறுதி தொகையினை பெற்றுக்கொள்ள முடியும்.

லிட்ரோ எரிவாயு சிலிண்டர்களைப் பயன்படுத்தியதன் விளைவாக அல்லது சிலிண்டர் வெடிப்புகள் மற்றும் துணைக்கருவிகளால் அல்லது திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயு உற்பத்திக் குறைபாட்டினால் ஏற்பட்ட மரணம், உடல் காயம் அல்லது சேதம் ஆகியவை நிரூபிக்கப்பட்டால் மாத்திரமே வாடிக்கையாளர்கள் இழப்பீடு கோர முடியும். லிட்ரோ மற்றும் லாஃப் எரிவாயு நிறுவனம் தவறுகள் இருந்தால் அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் டிசம்பர் 4 ஆம் திகதிக்கு முன்பாக விநியோகிக்கப்பட்ட சீல் வைக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாத அனைத்து எரிவாயு சிலிண்டர்களையும் திரும்பப் பெறுமாறும் இரு நிறுவனங்களுக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

மேலும் இறக்குமதி ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கும் என நம்புவதாகவும் நிதிய மைச்சர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இந்திய விஜயத்தின் போது இந்திய அரசாங்கத்துடன் நடத்திய பேச்சுக்கள் வெற்றியடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்துடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நாட்டிற்கு வெளியில் இருப்பதால், பிரதமர் மகிந்த ராஜபக்ச தலைமையில் அலரிமாளிகையில் அமைச்சரவைக் கூட்டம் இடம்பெற்றதுடன், நாட்டில் நீண்டகாலமாக நிலவும் டொலர் தட்டுப்பாடு குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது. டொலர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய சர்வதேச நாணய நிதியத்திடம் நிதி உதவி பெறுமாறு பல அமைச்சர்கள் பரிந்துரைத்துள்ளஅதேசமயம் சில அமைச்சர்கள் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடினால் நிபந்தனைகளுக்கு அரசாங்கம் உடன்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சர்வதேச நாணய ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை நாடுமாறு பல்வேறு தரப்பினரும் அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுத்து வரும் நிலையில், அது தொடர்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச வெளிநாடு சென்றுள்ளமையினால், பிரதமர் மகிந்த ராஜபக்ச தலைமையில் இந்த அமைச்சரவை கூட்டம் நடைபெற்றது.

இவ்வேளையில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதன் அவசியம் குறித்து அமைச்சர்கள் சிலர் கருத்துக்களை முன்வைத்துள்ள நிலையில், மேலும் சில அமைச்சர்கள் அவ்வாறு அதன் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டால் அதன் நிபந்தனைகளுக்கு இணங்க வேண்டி வரும் என்றும் இதனால் சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்லாது நட்பு நாடுகளின் உதவிகளை பெற்றுக்கொள்வோம் என்றும் கூறியுள்ளனர். இவ்வாறான நிலைமையில் சர்வதேச நாணய நிதித்திற்கு செல்வதா? இல்லையா? என்பது குறித்து அமைச்சரவையினால் இறுதி முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை.

தரமற்ற ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உர உற்பத்தி செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள நுண்ணுயிரிகள் இன்னும் செயலில் உள்ள நிலையில், உர கான்களுக்குள் எதிர்வினைகள் ஏற்படுகின்றன. நைட்ரஜனின் அதிகசெறிவு அல்லது உரத்தின் வலிமை பிரச்சினை அல்ல. ஆனால் உள்ளடக்கத்தின் தரமே பிரச்சினையாகும். குறைந்தளவு ஒட்சிசனை கொண்ட மூடிய கொள்கலன்களில் நுண்ணுயிரிகள் மிக வேகமாக வினை புரிந்து பல்வேறு வாயுக்களை வெளியிடும். நாடு முழுவதுமுள்ள விவசாயிகளால் உரக் கான்கள் வெடித்துச் சிதறுவதற்கு கான்களின் உள் அழுத்தமே காரணம் என்றும் பேராசிரியர் மேலும் தெரிவித்துள்ளார்.

6 மாதங்களில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லான குழந்தைகளுக்கு செலுத்தி, இரண்டு மற்றும் மூன்றாம் கட்ட பரிசோதனையை மேற்கொள்ள சீரம் இந்தியா நிறுவனத்துக்கு மத்திய மருந்து கட்டுப்பாட்டு ஆணைக்குழு அனுமதி அளித்திருந்தது.

இந்நிலையில் சீரம் இந்தியா நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி அடார் பூனாவாலா, இன்னும் 6 மாதங்களில் 3 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு கொரோனா தடுப்பூசி அறிமுகம் செய்யப்படவுள்ளதாக தெரிவித்துள்ளார். , தற்போது பரிசோதனையில் உள்ள இந்த தடுப்பூசி நல்ல செயல்திறன் கொண்டிருப்பதாகவும் அடர் பூனவல்லா தெரிவித்தார்.

நகரப் பிரதேசங்களை அடையாளம் கண்டு பிரகடனப்படுத்த அமைச்சரவை அங்கீகாரம்

ந.ஜெயகாந்தன்

பிரதேச சபை எல்லைகளிலுள்ள நகரப் பிரதேசங்களை அடையாளம் கண்டு அவற்றை பிரகடனப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நகரப் பிரதேசமாக வகைப்படுத்தும் போது அதற்காகப் பிரயோகிக்கும் முக்கியமான குறிகாட்டியாக 'நிர்வாக ரீதியான அலகு' பயன்படுத்தப்படும். அதற்கமைய, மாநகர சபை மற்றும் நகர சபைகள் மாத்திரம் தற்போது உத்தியோகபூர்வமாக நகரப் பிரதேசங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த குறிகாட்டிகளில் காணப்படும் குறைபாடுகளால் கூடுதலாக நகரமயமாகிய பிரதேசங்கள் இன்னும் கிராமிய பிரதேசங்களாகவே இனங்காணப்படுவதால், நகரமயமாதல் பற்றிய சரியான வரைவிலக்கணப்படுத்தலின் தேவை உருவாகியுள்ளது.

2000 ஆம் ஆண்டு 49 ஆம் இலக்க திருத்தப்பட்ட 1946 ஆம் ஆண்டு 13 இலக்க நகரங்கள் மற்றும் கிராமங்களை உருவாக்கும் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நகர அபிவிருத்திப் பிரதேசத்தைப் பிரகடனப்படுத்தும் அதிகாரம் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஆலோசனைக் குழுவின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்டு பிரதேச சபை எல்லைகளில் அமைந்துள்ள நகரப் பிரதேசங்களை அடையாளங் காண்பதற்கும், குறித்த குழுவின் பரிந்துரைகளுக்கமைய பிரதேச சபை எல்லைகளில் அடையாளங் காணப்படும் நகர பிரதேசங்களை நகர மற்றும் கிராமங்களை உருவாக்கும் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பிரகடனப்படுத்துவதற்கும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வடக்கு மாகாண நில விடுவிப்பு

உண்மை நிலையை ஆராய வருகிறார் வனஜீவராசிகள் அமைச்சர் ரத்னாயக்கா

வடக்கு மாகாணத்தின் நில விடுவிப்புத் தொடர்பில் ஆராய்வதற்காக நாளை வனப்பாதுகாப்பு, வன ஜீவராசிகள் அமைச்சர் சி.பி ரத்னாயக்கா நாளை வடக்கு மாகாணத்துக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

வனப்பாதுகாப்பு, வன ஜீவராசிகள் திணைக்களத்தின் பிராந்தியப் பணிப்பாளர் மா.பரமேஸ்வரன் முன்வைத்த கோரிக்கையினை தொடர்ந்து அமைச்சர் குறித்த விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளார்.

குறித்த விஜயத்தின் போது முதல் கட்டமாக நாளை மன்னார் விஜயம் மேற்கொள்ளும் அமைச்சர் மக்களின் கருத்துக்களை கேட்டறிவதுடன் தொடர்ச்சியாக பிற் மாவட்டக்களிலும் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயவுள்ளதாக தெரிய வருகின்றது.

குறித்த சந்திப்பின் போது வனஜீவராசிகள் திணைக்களத்தின் எல்லைப் படுத்தப்பட்ட காணிகள் தொடர்பில் மக்களிடம் காணப்படும் பிரச்சினைகள் குறித்து ஆராயவுள்ளார்.(30)

பொருளாதார நெருக்கடியில் பாராளுமன்றம் ஒத்திவைப்பு

-சந்தேகிப்பதாக எம்.பி. மரிக்கார்-

க.பிரசன்னா

அரசாங்கம் வர்த்தகர்களுக்கு சார்பாக செயற்படுவதுடன் அரசாங்கத் தலைவர்களின் கட்டளைகளுக்கு கீழ்படியும் உறுப்பினர்களை அரசாங்க பொறுப்பு முயற்சிகள் குழு மற்றும் அரசாங்க கணக்குகள் குழுவிலுள்ள பதவிகளுக்கு நியமிப்பதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

கொழும்பு எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற உறுப்பினர்களான சரித ஹேரத், அனுர பிரியதர்சன யாப்பா மற்றும் திஸ்ஸ விதாரண ஆகியோரை பதவியில் இருந்து நீக்க அரசாங்கம் முயற்சிப்பதால், பொருளாதார நெருக்கடியின் போது பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தாம் சந்தேகிப்பதாக தெரிவித்தார்.

பாராளுமன்றத்தை ஒத்திவைக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச எடுத்த தீர்மானம், தற்போதைய உறுப்பினர்களை மாற்றி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கூட்டணியினரை தெரிவுக்குழு உறுப்பினர்களாக நியமிக்கும் அரசாங்கத்தின் சாதுரியமான நடவடிக்கையாகும்.

வெளிநாட்டு கையிருப்பு தொடர்ந்து குறைந்து வருவதால், எதிர்வரும் வாரங்களில் இலங்கை பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் மீதமுள்ள 1.2 பில்லியன் அமெரிக்க டொலர்களை கையிருப்பில் வைத்துக் கொண்டு நாடு வெளிநாட்டுக் கடன்களை திருப்பிச் செலுத்த வேண்டும்.

மாதாந்த மருந்து, உணவு மற்றும் எரிபொருள் செலவீனமான 700 மில்லியன் அமெரிக்க டொலர்களை பூர்த்தி செய்த பின்னர் குறிப்பிட்ட தொகையே மிச்சமாகும். இதனால் எதிர்வரும் நாட்களில் இலங்கையில் உணவுப் பற்றாக்குறை ஏற்படக்கூடுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் தபால் சேவை வடக்கில் முற்றாக ஸ்தம்பிதம்

க.பிரசன்னா

தபால் துறையின் எதிர்காலத்தை கருத்தி கொண்டு நாடு முழுவதுமுள்ள தபால் ஊழியர்களினால் 24 கோரிக்கைகளை முன்வைத்து அடையாள பணிப்புறக்கணிப்பு போராட்டம் நேற்று நள்ளிரவு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட பணிப்புறக்கணிப்பு போராட்டம் காரணமாக பொதுமக்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களுக்கு வருத்தம் தெரிவிப்பதாக இலங்கை தபால் மற்றும் தொலைத்தொடர்பு சேவைகள் ஒன்றியத்தின் தலைவர் சிந்தக பண்டார தெரிவித்திருந்தார்.

தபால் துறையின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகவும் தமது கோரிக்கைகளுக்கு அரசாங்கம் உடனடியாக பதிலளிக்கும் என நம்புவதாகவும் அவர் தெரிவித்திருந்தார். இந்த பணிப்புறக்கணிப்பு காரணமாக கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை, 653 தபால் நிலையங்கள் மற்றும் 3,410 உப தபால் நிலையங்களின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருந்தன.

தபால் திணைக்கள ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் விநியோகத்தின் போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்பனவற்றுக்கு தீர்வு காணும் நோக்கில் இந்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டிருந்தது. தபால் அமைச்சுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடல் பயனளிக்காத நிலையிலேயே சேவையிலிருந்து விலகி தொழிற்சங்க நடவடிக்கையினை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஓய்வூதிய அதிகரிப்பு மறுக்கப்பட்டோர் வழக்கு விசாரணைக்கு ஏற்கப்பட்டது

-பிரதிவாதிகளுக்கு நீதிமன்றம் அழைப்பாணை-

2016ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்களுக்கு கடந்த 2020 ஆம் ஆண்டில் வழங்கப்பட வேண்டிய ஓய்வூதிய அதிகரிப்பினை வழங்காமைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரிப்பதற்கு ஏற்றுக்கொண்டுள்ளதுடன் பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அறிவித்தல் விடுக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கு நேற்று முன்தினம் (மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

சிரேஷ்ட சட்டத்தரணி சுனில் வட்டகல மூலம் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கில் மனுதாரர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி சாந்த ஜயவர்த்தன ஆஜராகி பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்களுக்கு நீதி வழங்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வாதம் செய்தார்.

இதையடுத்து இவ்வழக்கை மேற்கொண்டு விசாரிப்பதற்குத் தீர்மானித்த நீதிமன்றம், எதிர்வரும் 2022 ஜனவரி 21ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்படுவதாகவும் அன்றைய தினம் பிரதிவாதிகளை ஆஜராகுமாறு அழைப்பு விடுக்குமாறும் அறிவித்தார்.

இவ்வழக்கின் பிரதிவாதிகளாக அமைச்சரவை அமைச்சர்களும், பொது நிர்வாக அமைச்சின் செயலாளர், நிதி அமைச்சின் செயலாளர், ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

2020 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு கொரோனா பெருந்தொற்று காரணமாக அடிக்கடி நீதிமன்றம் மூடப்பட்டமையால் பரிசீலனைக்கு எடுப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்ததாக ஓய்வூதியதாரர்களின் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய அமைப்பின் உப தலைவரும் ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளருமான ஏ.எல்.முகம்மட் முக்தார் தெரிவித்தார்.

மேற்படி ஓய்வூதியர்களின் அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை இடை நிறுத்தும் அரசாங்கத்தின் தீர்மானம் காரணமாக சுமார் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் அரச ஓய்வூதியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்

-எலும்புக்கூடு அடையாளம் காணப்பட்ட-

பகுதியினை நேற்றைய தினம் கிளி.மாவட்ட நீதிபதி லெனின்குமார் பார்வையிட்டார்

எலும்புக்கூடு அடையாளம் காணப்பட்ட பகுதியினை நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.லெனின்குமார் பார்வையிட்டார்

இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை வெடிபொருட்களை அகற்றி கொண்டு செல்லும் போது மண் அணை பகுதியில் இருந்து துப்பாக்கிகளும் எலும்புக்கூடுகளும் அடையாளம் காணப்பட்டதை தொடர்ந்து அந்த பகுதியில் இடம்பெற்ற துப்புரவு பணி நிறுத்தபட்டு பொலிசாருக்கும் இராணுவத்தினருக்கும் தகவல் வழங்கப்பட்டது.

தொடர்ந்து குறித்த பகுதி பொலிசாரின் பாதுகாப்பின் கீழ் கொண்டு வரப்பட்டு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் குறித்த விடயம் பாரப்படுத்தபட்டது.

இந்த நிலையில் நேற்று குறித்த இடத்திற்கு வருகைதந்த கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி லெனின்குமார் கிளிநொச்சி வைத்திய சாலையின் சட்ட வைத்திய அதிகாரி தனுசன், பளை பொலிஸ் நிலையத்தின் உதவி பொலிஸ் பரிசோதகர் இராணுவத்தினர் கலோரஸ் நிறுவனத்தின் அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டு பார்வையிட்டனர்.

நேற்றையதினம் காலை 8 மணிக்கு அகழ்வு பணிகளை முன்னெடுப்பதாக தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலையில நேற்று எலும்புக்கூடு அடையாளம் காணப்பட்ட பகுதியினை நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.லெனின்குமார் பார்வையிட்டார். துப்புரவு செய்யப்பட்ட பகுதியில் உள்ள எச்சங்களை பகுப்பாய்வு செய்யப்பட்டதன் பின்னர் மேற்கொண்டு அகழ்வு பணிகளை முன்னெடுப்பது தொடர்பில் தீர்மானிக்கப்படவுள்ளது. (55)

2021ஆம் ஆண்டுக்கான சிறந்த கால்நடை பண்ணையாளர் தெரிவு

கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தினால் நடத்தப்பட்ட 2021ஆம் ஆண்டுக்கான சிறந்த கால்நடை பண்ணையாளர்களை தெரிவு செய்வதற்கான போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு அண்மையில். இடம்பெற்றது

திருக்கோவில் காஞ்சிரங்குடா கால்நடை உற்பத்தி வள நிலையத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் டாக்டர் எம் ஏ.எம்.பாஜி, கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எம்.ஏ.நதீர் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ் மற்றும் பணப் பரிசில்களை வழங்கினார்

இதன் போது அம்பாறை மாவட்ட மட்டத்திலான சிறந்த கால்நடை உற்பத்தி பண்ணையாளர் தெரிவில் நிந்தவூர் கால்நடை வைத்தியர் பிரிவைச் சேர்ந்த எம் கே எம் நிப்ராஸ் என்பவரது கோழி பண்ணை மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்று சான்றிதழ் மற்றும் 25000 ரூபா பணப் பரிசிலையும் பெற்றுக் கொண்டது.

18 வயதுக்கு குறைவானவர்களுக்கு மரண தண்டனை விதிக்காதிருக்க முடிவு

-சட்டத்தை திருத்த அமைச்சரவை அங்கீகாரம்-

ந.ஜெயகாந்தன்

18 வயதுக்கு குறைவானவர்களுக்கு மரண தண்டனை விதிக்காதிருப்பதை உறுதிப்படுத்தும் வகையில், குற்றவியல் வழக்குக் கோவைச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது

நீதிமன்றத் தத்துவப்படி குற்றமிழைக்கும் சந்தர்ப்பத்தில் 18 வயதுக்குக் குறைவான எந்தவொரு நபருக்கும் எதிராக மரண தண்டனையை விதித்தல் அல்லது குறித்துக் கொள்வதோ மேற்கொள்ளக் கூடாது எனவும், குறித்த தண்டனைக்குப் பதிலாக அந்நபர் ஜனாதிபதி விருப்பம் தெரிவிக்கும் வரைக்கும் தடுப்புக் காவலில் வைத்திருக்கும் தண்டனையை வழங்கும் வகையில் தண்டனைச் சட்டக்கோவையில் 53 ஆம் உறுப்புரையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆனாலும், 18 வயதுக்குக் குறைவாக இருப்பின் மரண தண்டனை விதிக்கப்படக் கூடாதெனக் கூறும் ஏற்பாடுகள் குற்றவியல் வழக்குக் கோவைச் சட்டத்தின் 281 ஆம் உறுப்புரையில் உட்சேர்க்கப்படவில்லை.அதனால், நிலவுகின்ற நிச்சயமற்ற தன்மையை நீக்குவதற்காக குற்றவியல் வழக்குக் கோவைச் சட்டத்தில் குறித்த திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென இனங்காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, குற்றவியல் வழக்குக் கோவைச் சட்டத்தின் 281 ஆவது உறுப்புரையை திருத்தம் செய்வதற்காக நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

யாழ்.மாநகரசபையின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

எனினும் இன்று பாதீட்டு விவாதத்தின் பின்னர்தான் ஆதரவளிப்பதா இல்லையா என்பது தொடர்பில் முடிவெடுக்கப்படும் என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தெரிவித்துள்ளது. யாழ்ப்பாணம் மாநகர சபையில் அங்கம் வகிக்கும் 45 உறுப்பினர்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் 16 உறுப்பினர்களும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் 13 உறுப்பினர்களில் முதல்வர் மணிவண்ணனுக்கு ஆதரவான 10 உறுப்பினர்களும் எதிராக 3 உறுப்பினர்களும் உள்ளனர்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் 11 உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் 3 உறுப்பினர்களும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் சார்பில் தலா ஒரு உறுப்பினரும் அடங்குகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் மூவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் மூவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒருவரும் என 24 உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் மூவரும் வெளிநடப்பு செய்யும் முடிவை எடுத்தால் பாதீடு நிறைவேற்றப்படுவதற்கும் சந்தர்ப்பம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

டெங்கை கட்டுப்படுத்த விசேட வேலைத்திட்டம்

ந.ஜெயகாந்தன்

நாட்டில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்த தேவையான விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

டெங்கு காய்ச்சலால் இந்த வருடத்தில் நவம்பர் மாதம் வரைக்கும் 25,910 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 19 பேர் உயிரிழந்துள்ளனர்.இவ்வாறு, மிகவும் ஆபத்தான நிலையை எட்டியுள்ள டெங்கு நோய்ப் பரவல், பருவப்பெயர்ச்சி மழைகாலத்தில் மேலும் அதிகரிக்கும் போக்குக் காணப்படுவதால், தொற்று நிலைமையைத் தடுப்பதற்கான குறித்த அனைத்துத் தரப்பினரின் பங்குபற்றலுடன் அமைச்சின் ஊடாக ஒன்றிணைந்த தேசிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.அதற்கமைய, ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி டெங்கு நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டை நிரந்தரமாக மேற்கொண்டு செல்வதற்கு அனைத்து நிறுவனத்திலும் அதற்கென ஒரு அலுவலரை நியமித்தல், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் விடயங்களை மீளாய்வு செய்து தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் ஆகிய பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அத்துடன் டெங்கு நோய்த் தடுப்பு தொடர்பாக மாகாண, மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய மட்டத்திலான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளின் பொறுப்புக்களை ஆளுநர்களுக்கு ஒப்படைக்கவும், டெங்கு நோய்த் தடுப்பு தொடர்பாக தற்போது காணப்படும் சட்ட ஒழுங்குகளை இற்றைப்படுத்தவும், டெங்கு நோய்த் தடுப்பு தொடர்பாக அனைத்துச் செயற்பாடுகளையும் ஒருங்கிணைப்பு செய்வதற்கான பொறுப்பை தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவுக்கு ஒப்படைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தினக்குரல்
THINAKKURAL
An Independent Daily Voice in Tamil
ஏசியன் மீடியா பப்ளிகேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்
இலக்கம் : 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
ஆசிரிய பீடம்:- 0217388301, 0217388302, 0217388303
பக்ஸ்:- 0217388304 விளம்பரம்:- 0217388307, விநியோகம்:- 0217388309
புதன்கிழமை 15 டிசம்பர் 2021 Wednesday 15th December 2021

இன, மத சமூகங்கள் மத்தியிலான உறவை மேலும் சிக்கலாக்கக்கூடாது

சமத்துவத்துடன் வாழ்வதற்கான உரிமையானது ஏனைய சகல உரிமைகளுக்கும் அடிப்படையாக அமைகிறது. மனிதகுலம் கௌரவம், மரியாதையுடன் கூடிய வாழ்க்கைத் தரத்தைப் பெறுவதற்கு சமத்துவமே அடித்தளமாகும்.நாடொன்றின் சகல பிரஜைகளும் சமமான அளவில் உரிமையை கொண்டிருப்பதை பாதுகாக்க பொருத்தமானதும் போதுமானதுமான நடவடிக்கைகளை அரசாங்கமே எடுக்க வேண்டும்.நாட்டின் வடக்கு, கிழக்கு, மலையகத்தைச் சேர்ந்த தமிழர்கள் மற்றும் தமிழ் பேசும் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் குழுவொன்று 'இருக்கும் உரிமைகள் பறிக்கப்படாமல்' இருப்பதை உறுதி செய்வதற்காக இலங்கை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வலியுறுத்தியுள்ளதை அவதானிக்க முடிகிறது.1987 இலங்கை- இந்திய உடன்படிக்கையின் பிரகாரம் அறிமுகப்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தத்தை, கொழும்பில் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் முழுமையாக அமுல்படுத்துவதற்கு இடமளிக்கவில்லை. காணி, பொலிஸ் உள்ளிட்ட முக்கியமான விடயங்கள் மீதான அதிகாரத்தை பகிர்ந்தளிப்பதற்கு தொடர்ந்து மறுத்து வருகின்றமையால், இலங்கையின் அரசியலமைப்பில் சுமார் நான்கு தசாப்தங்களாக முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாமல் இந்தத் திருத்தம் இருந்துவருவதுடன் அதனை முழுமையாக கைவிட்டு விடுவதற்கு முனைப்புகள் தீவிரமாக இடம்பெறுவதாக சந்தேகிக்கப்படும் நிலையிலேயே தமிழ் பேசும் அரசியல் சமூகத்தின் ஒரு தரப்பிலிருந்து இந்த அழைப்பு வெளிவந்துள்ளது.

13 ஆவது திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமையை இரத்துச் செய்ய வேண்டும் என்று தற்போதைய அரசாங்கத்திலுள்ள சிலர் கடுமையாக குரலெழுப்பி வருகின்றனர். ஆனால் 13 ஆவது திருத்தம் மட்டுமே இதுவரை வடகிழக்கில் பெரும்பான்மையினரான தமிழ் பேசும் மக்களுக்கு அதிகாரப் பகிர்வுக்கான ஒரேயொரு சட்டரீதியான உத்தரவாதமாக இருந்துவருகிறது.அதேசமயம் தென்னிலங்கையில் சிங்கள மக்களில் பலர் இந்த முறைமையினை 'அதிகம்' என்று கருதுகின்றனர்.ஆனால் தமிழ் அரசியல் சமூகத்தில் பெரும்பாலானவர்கள் மாகாண சபைகளுக்கான அதிகாரம் 'மிகக் குறைவு' என்று கருதுவதுடன் தமிழ் பேசும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள், அரசியல் அபிலாசைகளுக்கான நியாயபூர்வமான தீர்வை சமஷ்டி அல்லது கூட்டு சமஷ்டி முறைமையின் ஊடாக மட்டுமே அடைந்துகொள்ள முடியுமென்று திட்டவட்டமாக வலியுறுத்தி வருகின்றனர். அதேவேளை 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துமாறு இலங்கைத் தலைமைத்துவங்களிடம் இந்தியா பலமுறை கோரிக்கை விடுத்துள்ளது. அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்துவதற்காக, சட்டத்திற்கு அப்பால் செல்வது தொடர்பாக கொழும்பு உறுதிமொழிகளை பலதடவை வழங்கியிருந்தாலும், 'இதுவரை அது நடக்கவில்லை' என்று சிரேஷ்ட தமிழ் அரசியல்வாதியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா .சம்பந்தன் தெரிவித்திருக்கிறார்.

நாட்டில் தமிழ் பேசும் மக்களின் வாழ்வதற்கான உரிமை மற்றும் மனித உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் குற்றமிழைத்தோருக்கு எந்தவொரு சட்ட நடவடிக்கைகளிலிருந்தும் தண்டனையிலிருந்தும் விலக்கு அளிக்கப்படுதல் போன்ற கசப்பான அனுபவங்கள் தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான பாரபட்சங்களை மேலும் வலுப்படுத்துவதுடன் மனித உரிமை மீறல்களை நிறுவனமயமாக்கியுள்ளது.இந்நிலையில் தற்போதைய ஒற்றையாட்சி முறைமையில் நியாயபூர்வமான தீர்வை எட்டமுடியாதெனவும் அதனால் சமஷ்டி முறைமையிலான ஏற்பாட்டை மேற்கொள்ளுமாறும் தமிழ்த் தரப்பு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கையில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும் வாழ்வுரிமை உட்பட அடிப்படை உரிமைகளை அனுபவிக்க முடியாமல் தமிழ் பேசும் மக்களில் கணிசமானோர் பெரிதும் சிரமப்படுகின்றனர் . வாழ்வதற்கான சுதந்திரம், சமத்துவம், பேச்சு சுதந்திரம் , அமைதியான முறையில் ஒன்றுகூடுதல், சுதந்திரமாக நடமாடுதல், எந்தத் தொழிலையும் செய்வதற்கான சுதந்திரம் தன்னிச்சையான கைதுகளுக்கு எதிரான பாதுகாப்பு போன்ற விடயங்கள் அனைவருக்கும் உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்கின்றபோதிலும் அனைவரும் சமத்துவமான முறையில் நடத்தப்படுகிறார்களெனக் கூறமுடியாது.

ஒன்பது மாகாண சபைகளும் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டு காலாவதியான பின்னர் இரண்டு வருடங்களாக செயலிழந்துள்ளன. அதேவேளை, பல்வேறு ஜனாதிபதி செயலணிகள் மூலம் அரசாங்கம் சிறுபான்மை சமூகங்களின் அதிகாரங்களை பறிக்க முயற்சிப்பதாக கவலை தெரிவிக்கப்படுகிறது. இத்தகைய சூழ்நிலையில் 13 ஆவது திருத்தத்தை ஒரு நிரந்தரத் தீர்வாக தாங்கள் பார்க்கவில்லை என்றாலும், ஏற்றுக்கொள்ளக்கூடிய நிரந்தரத் தீர்வு கிடைக்கும் வரை, இடைக்காலத் தீர்வாக அதனை முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென்று வலியுறுத்தலும் விடுக்கப்பட்டிருக்கிறது.ஏற்கனவே கழனமான மற்றும் சிக்கலான இன, மத சமூகங்கள் மத்தியிலான உறவை மேலும் சிக்கலாக்காமலும் ஜனநாயகத் தன்மையை மேலும் குறைமதிப்பிற்கு உட்படுத்தாமலும் கருத்தொருமைப்பாட்டுடன் தமிழ் பேசும் மக்களின் நீண்டகால துன்பங்களுக்கு தீர்வு காணப்படவேண்டும் என்பதே நியாயபூர்வமாக சிந்திப்போரின் எதிர்பார்ப்பும் வலியுறுத்தலாகவும் காணப்படுகிறது.

மக்கள் அரசியலமைப்பு புதிதாகவும் வேறுபட்டதாகவும் சிந்திக்க வேண்டியது அவசியம்

பசில் பெர்னாண்டோ

> 1978 அரசியலமைப்பின் கீழ் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது மிக முக்கியமான காரணியாக இருக்கலாம். துன்பங்கள்தான் வரலாற்றின் மிகப் பெரிய ஆசான். இப்போது, மக்கள் இதுபோன்ற மோசமான அனுபவங்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதற்கான வழிகளை உருவாக்கும் நோக்கத்துடன் தங்களின் சொந்த கசப்பான அனுபவங்களைப் பற்றி சிந்திக்கலாம்

இரகசியமானதும் நேர்மையற்றதுமான முறைகளுக்கு எதிராக அதிகளவுக்கு பங்கேற்பு செயல்முறையின் மூலம் புதிய அரசியலமைப்பை உருவாக்குவது குறித்த கலந்துரையாடல் இப்போது நடைபெற்று வருகிறது. கலந்துரையாடப்படும் சில கேள்விகளுக்கு பதிலான சில யோசனைகள் இவை.

1978 அரசியலமைப்பின் பிரச்சினையை கையாள்வதில், அரசியலமைப்பு தொடர்பான பல அடிப்படைக் கருத்துக்கள் பொய்யாக்கப்படுவதை நாம் உண்மையில் எதிர்கொள்கிறோம். இந்த பொய்மைப்படுத்தல்களின் நோக்கம், அது அடைய விரும்பும் நோக்கங்களின் அடிப்படையில் இயற்கையில் மிகவும் கசப்பான ஒரு ஆவணத்திற்கு ஜனநாயகரீதியான சட்டபூர்வமான தன்மை மற்றும் ஜனநாயகரீதியாக சட்டபூர்வமானதொரு தோற்றப்பாட்டை உருவாக்குவதாகும். ஜனநாயகத்தை முற்றிலுமாக இடம்பெயரச் செய்வதே இதன் அடிப்படையம்சமாகும்.

அந்தமாதிரியான தன்மையில் ஒரு சிக்கலைக் கையாள்வதில், வழமையான விதத்தில் சிந்திப்பது இந்த சூழ்நிலையிலிருந்து எப்படி வெளியேறுவது என்பதற்கான எந்தவொரு குறிகாட்டிகளையும் எமக்கு வழங்கப் போவதில்லை. நாம் எமது அரசியலமைப்புச் சட்டம் என்று அழைக்கும் ஆவணத்தின் அப்பட்டமான முரட்டுத்தனத்தை முதலில் அம்பலப்படுத்துவதும்,வழமைக்கு மாறாக புதிதாக சிந்திப்பது முக்கியம்.

முற்றிலும் நுட்ப ரீதியான மற்றும் சட்டபூர்வமான விதிமுறைகளை நாம் நினைக்கும் போது, 1978 அரசியலமைப்பின் அதே கட்டமைப்பிற்குள் நாம் சிக்கிக் கொள்கிறோம், ஆனால் அந்த அரசியலமைப்பின் முடிவை நாம் காண வேண்டுமானால், நாம் செய்யாமல் இருப்பது கட்டாயமாகும். 1978 அரசியலமைப்பை இரத்துச் செய்வதற்கும் மாற்றுவதற்கும் அந்த அரசியலமைப்புச் சட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட வழியே வழிமுறையாகவுள்ளது என்பதுதான் பல வழக்கறிஞர்கள் சிக்கிக்கொண்ட ஒரு பிரச்சினை. ஒரே வழிமுறையில் மட்டும் சிந்தித்தால், வேறு வழியில்லை. எனவே,ஆரம்பத்திலேயே ஒருவழியில் சிந்தித்தால் 1978 அரசியலமைப்பை முற்றிலுமாக நிராகரிக்கும் போரில் நாம் தோற்றுவிடுவோம்.

நாம் கையாள்வது வெறும் ஏமாற்றுவாதமல்ல . இலங்கையின் சமூக, பொருளாதார, சட்ட மற்றும் கலாசார வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் முழு தேசத்தையும் ஆபத்தில் ஆழ்த்தியிருக்கும் மிகவும் நடைமுறையிலுள்ள பிரச்சினையை நாங்கள் கையாள்கிறோம். பொருளாதார நெருக்கடி, சமூக நெருக்கடி, சட்டம் ஒழுங்கு நெருக்கடி என மிக மோசமான நிலையை அடைந்துள்ள நாடு கடந்த காலங்களில் அனுபவித்ததை விட பல மடங்கு பெரிதாக்கப்பட்டுள்ள சூழலை நாம் கையாள்கின்றோம்.

இது தர்க்கம் அல்லது சட்டத்தின் பிரச்சினை அல்ல. இது மக்களின் வாழ்க்கை நிலைமைகளைப் பற்றியது. பலருக்கு அது உயிர்வாழ்வதற்கான விடயமாகிவிட்டது. இன்னும் பலருக்கு இலங்கையில் இருக்கப் போகிறார்களா இல்லையா என்ற கேள்வி எழுந்துள்ளது. இவ்வாறாக, அரசியலமைப்பு உருவாக்கம் இந்த நிலைமைக்குக் காரணமான அடிப்படை உண்மைகளைத் நீர்க்கும் முயற்சியின் ஒரு பகுதி மட்டுமே. 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு, நாட்டில் இந்த நிலைமையை ஏற்படுத்தியதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்றாகும்.

இந்த மோசமான நிலைக்கு ஒரு காரணம் 1978 அரசியலமைப்புச் சட்டமே என்பதுதான் எமது தொடக்கப் புள்ளி. மக்கள் எதிர்நோக்கும் இந்த அடிப்படையான கள மட்டத்திலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்க வேண்டுமானால் அது அகற்றப்பட வேண்டும்.

அது மட்டுமே தீர்வாக இருக்கும் என்று நாங்கள் கூறவில்லை. 1978 அரசியலமைப்பை அகற்றாமல், நாம் மேலே குறிப்பிட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க வேறு எந்தவொரு குறிப்பிடத்தக்க மாற்றத்தையும் அடைய முடியாது என்று மட்டுமே நாங்கள் கூறுகிறோம்.

மேற்கூறிய கருத்துக்கள், கடந்த காலத்தில் மக்கள் மத்தியில் ஆர்வத்தை ஏற்படுத்துவது மிகவும் கடினமாக இருந்த பிரச்சினைகளில் இன்று மக்கள் ஈடுபடுவார்கள் என்பதாகும். அனைத்து கண்டுபிடிப்புகளுக்கும் அடிப்படையாக தேவைப்பாடே உள்ளது. மேற்கூறிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு அடிப்படை, சட்ட கட்டமைப்பை வழங்கக்கூடிய அரசியலமைப்பின் புதிய கண்டுபிடிப்பு இன்று ஒரு விருப்பமல்ல, ஆனால் அவசியமானது.

எனவே, இவ்வாறான சூழ்நிலையில், மக்கள் ஈடுபட்டவுடன், அவர்கள் உயிர்வாழ விரும்பினால், அவர்களால் தப்பிக்க முடியாத சில அடிப்படைப் பிரச்சினைகளைச் சமாளிக்க நாட்டின் மேதைகளை நாங்கள் அழைக்கிறோம் என்பதே இதன் அர்த்தமாகும். இந்த மாதிரியான பிரச்சினைகளை பரிசீலிப்பதற்காக இந்த மேதையை கொண்டுவந்தால், 1978 அரசியலமைப்பின் எல்லைகள் போன்ற முற்றிலும் கருத்துருவாக்க சிக்கல்களைத் தவிர்ப்பதற்கான வழிகளை மக்கள் உருவாக்க முடியும். அதை மாற்றினால், மக்களின் வாழ்க்கைச் சூழ்நிலைகளில் முக்கியமான மாற்றங்களை மேற்கொள்ளும் செயற் பாட்டில் சில கருத்துருவாக்கங்களை கண்டறியலாம் அல்லது சில கருத்துவடிவங்கள் முற்றிலும் புறக்கணிக்கப்படலாம்.

நிறவெறிக்கு ஒரு உறுதியான அடித்தளத்தை வழங்கிய தென்னாபிரிக்க அரசியலமைப்பை நீக்கிவிட்டு, அந்த அரசியலமைப்பிற்கு அடிப்படையில் எதிரான கருத்துக்களை கொண்டு வருவதை முன்கூட்டியே சிந்திக்க முடியவில்லை. நிறவெறியை அகற்றுவதற்கு முன்பே சட்ட சூத்திரங்கள் உள்ளன. இருப்பினும், இயக்கம் முன்னேறும்போது, நியாயமான தீர்வைத் தவிர்ப்பதன் விளைவுகள் இந்த இயக்கத்தின் எதிர்ப்பாளர்களால் கூட எதிர்கொள்ளப்படும் போது, இதன் காரணத்தின் பகுத்தறிவும் நியாயமும் வெளிப்பட்டது . அந்த மாதிரியான வரலாற்றுச் சிக்கலான சூழ்நிலைக்கு மத்தியில் சட்ட நோக்கங்களுக்காகத் தேவையான பல்வேறு சூத்திரங்கள் உருவாக்கப்பட்டன. இலங்கை எதிர்கொள்ளும் பிரச்சினைகளை விட மிகப் பெரிய பிரச்சினைகளை எதிர்கொண்ட நாடுகளில் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான வழிமுறையாக அரசியலமைப்பு பேரவைகள் உருவாக்கப்பட்ட பல சூழ்நிலைகள் தொடர்பாகவும் இதையே கூறலாம்.

உதாரணமாக, இந்தியாவில், 1947 ஆம் ஆண்டு இந்திய சுதந்திரச் சட்டத்தின்படி, அவர்கள் இந்தியாவை விட்டு வெளியேறியபோது, அந்தச் சட்டத்தில் அரசியலமைப்புச் சபைக்கான எந்த ஏற்பாடும் இல்லை. இருப்பினும், சிறந்த அரசியலமைப்புகள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன என்பது பற்றி மக்களுக்குத் தெரியும் என்பதை முன்னணி இந்தியர்கள் அறிந்திருந்தனர். அவர்கள் தங்கள் அரசியலமைப்பு சபையை உருவாக்கினர், இது ஆட்சி அமைப்பு எவ்வாறாக இருக்க வேண்டும் என்பது குறித்த தேசிய உரையாடலை உருவாக்கியது. அத்துடன் ஜனநாயகத்திற்கான உறுதியான அடித்தளத்தை வழங்கும் ஒரு அடிப்படை கட்டமைப்புடன் அவர்களுக்கான சொந்த அரசியலமைப்பை உருவாக்கியது.

சிலியில் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தில் பிரச்சினை நீடித்தாக இருந்துவருகிறது .அந்த நாட்டில் நிலவிய இராணுவ பாணியிலான ஆட்சியை வீழ்த்தி, ஜனநாயக வழியிலான ஆட்சியை நிலைநிறுத்துவதற்கு ஒரு நடவடிக்கையாக அல்லாமல் தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

மக்களின் தீவிரமான பங்கேற்புடன் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுவதற்கான கலந்துரையாடலுக்கான இந்தக் கட்டத்தில், பின்வரும் காரணிகள் முக்கியமானவை:

தற்போதுள்ள அரசியலமைப்பு முற்றாக நீக்கப்படுவதுடன் அது சட்ட ஆவணமாக தயாரிக்கப்பட்ட மிகவும் துரதிர்ஷ்டவசமான ஆவணங்களில் ஒன்றாகக் கருதப்பட வேண்டும். உண்மையில் இலங்கை வரலாற்றில்,சிலசமயம் முழு உலகிலுமான ஒரு அரசியலமைப்பாகும்.

அதே மாதிரியை அடிப்படையாகக் கொண்ட எந்தவொரு அரசியலமைப்பும் இலங்கையின் அரசியலமைப்பாக அங்கீகரிக்கப்படக்கூடாது. இந்த இரண்டு விடயங்களிலும் ஒருமித்த கருத்து உள்ளது. இதுவரை அது அவ்வளவுக்கு வலுவாக வெளிப்படுத்தப்படாமல் இருக்கலாம். இருப்பினும், செயல்முறை தொடங்கும் போது அதை தீவிரமாகப் பின்பற்றினால் அந்த தன்மை வெளிப்படும். மேதைகளை மேற்புறத்திற்கு வருமாறு அழைப்பதாக அதுவே முன்னர் அர்த்தப்படுத்தப்பட்டது. இன்று, நாடு 1931 இல் இருந்த இலங்கையிலிருந்து மிகவும் வேறுபட்டது. பல ஆண்டுகளாக, மக்கள் மாறிவிட்டனர். மிகவும் நுட்பமான மக்கள்தொகை இப்போது உள்ளது. அந்த மக்கள்தொகையில், பல அடுக்குகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் பிரச்சினைகளை மிகத் தெளிவாகவும் மிக வலுவாகவும் வெளிப்படுத்தக்கூடியவர்கள். சமீபத்திய மாதங்களில், சில முக்கியமான பிரச்சினைகள் எழுந்தபோது, அரசாங்கத்தின் சில செயல்களை அவர்கள் ஏன் நிராகரிக்கிறார்கள் என்பதற்கான காரணங்களை வெளிப்படுத்தும் வகையில், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்கள் மூலம் உடல் ரீதியாக மட்டுமல்ல, அறிவுபூர்வமாகவும் தலையிடும் திறனை நாங்கள் கண்டோம். எனவே, அரசியலமைப்பை உருவாக்கும் விடயத்தில் கணிசமான அளவுக்கு அதிநவீன விவாதத்திற்கான ஆற்றல் கிடைக்கிறது.

1978 அரசியலமைப்பின் கீழ் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது மிக முக்கியமான காரணியாக இருக்கலாம். துன்பங்கள் தான் வரலாற்றின் மிகப் பெரிய ஆசான். இப்போது, மக்கள் இதுபோன்ற மோசமான அனுபவங்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதற்கான வழிகளை உருவாக்கும் நோக்கத்துடன் தங்களின் சொந்த கசப்பான அனுபவங்களைப் பற்றி சிந்திக்கலாம் .

சமூகத்தின் அனைத்துத் துறைகளுக்கும் இந்த வாய்ப்பை வழங்குவதே இந்த நேரத்தில் தேவை. ஆண்களுக்கும் பெண்களுக்கும், பழமைவாத அல்லது தீவிரவாதத்தின் மாறுபட்ட அளவிலான அனைத்து சமூகங்களுக்கும், பழைய அரசியலமைப்பின் கருமூலத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருகுழுவிற்கும் எடுத்துக்காட்டாக, குறுக்கீடுகள் மற்றும் ஊழல் நடைமுறைகளின் சூழலில் பகுத்தறிவு முறையில் தங்கள் வர்த்தகத்தை மேம்படுத்த முடியாத தொழில்முனைவோர், வங்கிகள் மற்றும் குறிப்பாக மத்திய வங்கி மற்றும் பொறுப்புக்கூறல் பொறிமுறைகள் போன்ற ஏனைய அலுவல்களில் ஈடுபடுபவர்கள் அனைவரும் தங்கள் தொழில்முறை அறிவைப் பயன்படுத்துவதில் இருந்து தடுக்கப்படுகிறார்கள்.

குற்றப் புலனாய்வுப் பிரிவுகள், புலனாய்வுப் பிரிவுகள் போன்ற சட்ட அமுலாக்கப் பிரிவுகளில் ஈடுபட்டுள்ளவர்கள் உட்பட அனைவரும் கடுமையான அடக்குமுறைகளுக்கு ஆளாகிறார்கள்.அவர்கள் தமது தொழில்சார் நிபுணத்துவ கோட்பாடுகளுக்கு அமைய செயற்படாதிருப்பதற்கான நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. விவசாயிகள், தொழிலாளர்கள், ஆசிரியர்கள், மீனவர்கள் மற்றும் குறிப்பாக, அரசாங்கத் துறையில் உள்ளவர்கள், ஊனமுற்றோர் போன்ற பிற்படுத்தப்பட்ட ஆட்கள் உட்பட அனைத்து வகையான உழைக்கும் மக்கள் நெருக்குவாரத்திற்குள்ளாவது அபத்தமானது.

தாங்கள் கட்டமைக்கும் புதிய அரசியலமைப்பு,நியாயபூர்வமான மற்றும் நிலையான சமூகத்தில் வாழ்வதற்கான பெரும் நன்மைகளை வழங்குவதாக இந்த மக்கள் அனைவரும் உணர்ந்தால், சிறுபான்மையினர் பிரச்சினை போன்ற கடந்த காலங்களில் மிகவும் கடினமான பிரச்சினைகளில் கூட பல சமரசங்களைச் செய்ய அவர்கள் தயாராக இருப்பார்கள். எந்தவொரு துறையின் மீதும் முழுமையான எதிர்மறையான தன்மையுடன் கலந்துரையாடலைத் தொடங்குவது , அவை எவ்வளவு பழமைவாதமாக இருந்தாலும், போரில் ஆரம்பத்திலேயே தோற்றுப் போவதாகும். எந்தவொரு பிரச்சினையையும் அமைதியான முறையில் தீர்க்கக்கூடிய பகுத்தறிவுடனான உரையாடலின் வடிவமாக அரசியலமைப்பைக் காண வேண்டும். இது நியாயமற்ற போட்டியைப் பற்றிய பல அச்சங்களை நீக்கும். சிலர் மற்றவர்களுக்கு எதிராக சில சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். நாங்கள் இப்போது அத்தகைய கட்டத்தில் இருக்கிறோம். நாம் எழுத்துமூல அல்லது பேச்சுமூல தொடர்பாடல் செயல்முறையைத் தொடங்க வேண்டும். குறிப்பிட்ட சில நுட்பரீதியான பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது என்பது இந்த எழுத்துமூல அல்லது பேச்சு மூல தொடர்பாடல் திருப்பத்தை எடுக்கும் விதத்தில் விடப்பட வேண்டும்.

கொழும்பு டெலிகிராப்

சுமந்திரனுக்கும் சிஷ்யனுக்கும் மூளை தெளிவாகி இருக்கலாம்

-13 கதை தொடர்பில் கஜேந்திரகுமார் கிண்டல்-

அரசியலமைப்பு 13 ஆம் திருத்தம் தமிழ் மக்களின் தீர்வு விடயத்தில் ஆரம்ப புள்ளி என இதுவரை கூறிவந்தபாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மற்றும் அவரது சிஷ்யன் சாணக்கியன் ஆகியோரின் கருத்தில் வெளிநாடு சென்று வந்த பின்னர் மாற்றம் ஏற்பட்டுள்ளது தெரிகிறது என அகில இலங்கை தமிழ் காங்கிரசின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

வெளிநாட்டுக்குச் சென்று வந்த பின்னர் சிலவேளைகளில் அவர்களின் மூளை தெளிவாகி இருக்கலாம் எனவும் அவர் கிண்டலாகக் கூறினார்.

காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய கஜேந்திரகுமாரிடம் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

13ஆவது திருத்தச் சட்டமே தமிழ் மக்களின் தீர்வுக்கான ஆரம்ப புள்ளியாக இருக்கும் என சுமந்திரன் பல வருடங்களாக கூறி வந்தார். அவருடைய சிஷ்யனான சாணக்கியன் கடந்த மாதத்துக்கு முன்னர் வரை 13 ஆவது திருத்தத்தின் அவசியம் பற்றிப் பேசிவந்தார்.

இருவரும் வெளிநாடு சென்று வந்த பின்பு 13காலாவதியாகிவிட்டது. அதில் ஒன்றுமில்லை எனக் கூறுவது ஏன்? எனத் தெரியவில்லை.

ஒருவேளை வெளிநாட்டில் பலரை சந்தித்திருப்பார்கள். அது அவர்களின் மூளையில் ஒரு தெளிவை ஏற்படுத்தி இருக்கலாம் எனவும் கஜேந்திரகுமார் கூறினார். (ச-75)

வீட்டுத்திட்டங்களுக்கான கொடுப்பனவுகள் முழுமையாக வழங்கப்படவில்லை

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வீடற்ற குடும்பங்களுக்கு வழங்கப்;பட்ட வீட்டுத்திட்டங்களுக்கான கொடுப்பனவுகள் முழுமையாக இதுவரை வழங்கப்படாமையினால் வீட்டுத்திட்டப்பயனாளிகள் தமக்கான வீடுகளை முழுமைப்படுத்த முடியாத நிலையில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மாவட்டத்தில் கடந்த 2018ஆம் , 2019ஆம் ஆண்டுகளில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டமற்றும் வீட்டுத்திட்டங்கள் கிடைக்கப்;பெறாத வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு இவ்வாறான குடும்பங்களுக்கான வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டிருந்தன.

மாவட்டத்தின் மாந்தை கிழக்கு துணுக்காய் ஒட்டுசுட்டான் முல்லைத்தீவு, மணலாறு, கரைதுரைப்பற்று ஆகிய ஆறு பிரதேச செயலாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா ஏழரை இலட்சம் ரூபாபெறுமதியான வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்;டு முதலாம் கட்ட மற்றும் இரண்டாம் கட்ட கொடுப்பனவுகளாக ஒரு இலட்சம் ரூபா ஒன்றரை இலட்சம் ரூபா என பகுதிக் கொடுப்பனவுகள் மாத்திரம் வழங்கப்பட்ட நிலையில் ஏனைய கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை. இவ்வாறு வீட்டுத்திட்ட பயனாளிகள் தமக்கான வீடுகளுக்குரிய கட்டுமானப்பணிகளை தொடங்கிய நிலையில் அவற்றை இடைநடுவில் கைவிட்டுள்ளனர்.

இதேவேளை ஒரு சில பயனாளிகள் வழங்கிகளிலும் தனியார் நிறுவனங்களிடமும் கடன்களை பெற்று வீடுகளுக்கான கட்டுமான பணிகளை முன்னெடுத்துள்ளனர்.

இவ்வாறான பயனாளிகள் தமதுவீடுகளை கட்டிமுடிக்க முடியாமலும் வீட்டுக்காக பெற்ற கடன்களை மீளச் செலுத்த முடியாமலும் பெரும் கஸ்ரங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்வாறு இரண்டாயிரத்து 211 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு இரண்டாயித்து 211வீடுகள் வழங்கப்பட்டிருந்தன.

இதற்கென அப்போதைய மதிப்பீட்டின் படி 1589 மில்லியன் ரூபா நிதி தேவையான நிலையில் 428 மில்லியன்ரூபா நிதி மாத்திரமே விடுவிக்கப்பட்டது என்றும் ஏனைய நிதி இது வரை விடுவிக்கப் படவில்லை என்றும் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (55)

முல்லைத்தீவு சுற்றுவட்டத்தில் பாலன் பிறப்பு முன்னாயத்த பாலன்குடில்

முல்லைத்தீவு நகரில் உள்ள சுற்று வட்டத்தில் பாலன் பிறப்பினை முன்னிட்டு முன்னாயத்தமாக பாலன்குடில் ஒன்று வைக்கப்பட்டுள்ளது

முல்லைத்தீவு பங்குத் தந்தை அகஸ்ரீனின் நெறிப்படுத்தலிலும், முல்லை பங்கு இளைஞர்களின் வழிகாட்டலிலும், வட்டுவாகல் இராணுவத்தினரின் அழகு படுத்தலில் பாலகுடில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த பாலன் குடில் நேற்று வைபவரீதியாக வைக்கப்பட்டு வழிபாடுகள் நடத்தப்பட்டுள்ளன. நேற்று காலை நடைபெற்ற இந்நிகழ்வில் கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர், உறுப்பினர் பூலோகம், கரைதுறைப்பற்று பிரதேச சபை செயலாளர், பங்குத்தந்தை, பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர்;. (15)

சிறுவர் பூங்கா அமைப்பதற்கான ஆரம்ப கட்ட கலந்துரையாடல்

சாவகச்சேரி நகரசபையினரால் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரக் கூடிய விதத்திலான சிறுவர் பூங்கா அமைப்பதற்கான ஆரம்ப கட்டக் கலந்துரையாடலும்; கள விஜயமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை; பிற்பகல் இடம்பெற்றது.

சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதனின் தலைமையில் நகரசபையின் பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ; சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள்,நலன்விரும்பிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சிறுவர் பூங்காவின் அமைவு தொடர்பாக பல்வேறுபட்ட தீர்மானங்களை எடுத்திருந்தனர்.

சாவகச்சேரி நகரசபையினரால் அண்மையில் நுணாவில் பகுதியில் இரண்டு கோடி 20 இலட்சம் ரூபாவில் கொள்வனவு செய்யப்பட்ட 29பரப்புக் காணியிலேயே சிறுவர் பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகிறது.குறித்த சிறுவர் பூங்காவை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள்,இளைஞர்கள் மற்றும் முதியவர்கள் என சகலரையும் கவரும் விதத்தில் சில சில தனித்துவமான அம்சங்களை உள்ளடக்கி அமைக்க நகரசபையினர் எண்ணியுள்ளனர்.

தற்போது கொரோனா சூழ்நிலை காரணமாக சிறுவர்கள் தொடக்கம் முதியவர்கள் வரை பலரும் தனிமை உணர்வை எதிர்கொள்வதாகவும்,அதனால் ஏற்படும் உள ரீதியான நெருக்கடிகளுக்கு சிறுவர் பூங்கா ஓர் சிறந்த தீர்வாக அமையும் என நகரசபையில் எடுத்த தீர்மானத்திற்கமைவாக பலருடைய நிதி உதவிகள் மற்றும் ஒதுக்கீடுகளையும் எதிர்பார்த்து சிறுவர் பூங்கா அமைப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை சாவ கச்சேரி நகரசபையினர் ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆரம்பகட்ட கலந்துரையாடலைத் தொடர்ந்து கூட்டத்தில் கலந்துகொண்டோர் நுணாவிலில் அமைந்துள்ள சிறுவர் பூங்கா காணிக்கும் விஜயம் ஒன்றினையும் மேற்கொண்டிருந்தனர்.- (13)

மனைப் பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கான வேலைத்திட்டம்

இரண்டு இலட்சம் மனைப் பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கான தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் தெல்லிப்பளை பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட சமுர்த்திப் பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு அண்மையில் தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

பிரதேச செயலர் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அங்கஜனின் பிரத்தியேக செயலாளரும், பிரதேசசபை உறுப்பினருமான ச.இராமநாதன் கலந்துகொண்டு வாழ்வாதார உதவிகளை வழங்கி வைத்தார். அத்துடன் நிகழ்வில் இளவாளை-வடமேற்கு கிராம அலுவலர் பிரிவில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட பனை சார் சௌபாக்யா உற்பத்திக் கிராம பயனாளிகளுக்கு அங்கத்துவச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றிருந்தது.-(13)

அருளாசியுரையும் வேதபாராயண நிகழ்வும்

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமான தொரு வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், இன்று காலை 6.30 மணிக்கு கிளிநொச்சி ,புளியம்பொக்கணை சந்தி ,செல்வவிநாயகர் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீகாந்தராசா குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

வேரவில் கிராம மக்களைச் சந்தித்த சிறிதரன் எம்.பி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வலைப்பாடு, கிராஞ்சி, பொன்னாவெளி, வேரவில் ஆகிய கிராமங்களின் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் வேரவில் கிராம மக்களை நேற்று முன்தினம் வேரவில் பொது நோக்கு மண்டபத்தில் சந்தித்தார்.

குறித்த சந்திப்பில் வேலை ஆரம்பித்து தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள பல்லவராயன் கட்டுச் சந்தி தொடக்கம் கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு, பொன்னாவெளி ஆகிய கிராமங்களுக்கு செல்லும் பிரதான வீதி தொடர்பிலும் சமகால அரசியல் நிலவரம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

கேள்வி அறிவித்தல் - திருத்தம்
சபைநிதி வேலைத்திட்டம் - 2021
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

10.12.2021 இல் தினக்குரல் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் 08 ஆவது பந்தியில் உள்ள அட்டவணையில் 05 ஆவது வரிசையில் உள்ள விடயத்தினை பின்வருமாறு திருத்தி வாசிக்கவும்.

தொடர் இல	கேள்வி எண்	வேலை விபரம்	மதிப்பீட்டுத் தொகை (With Out Vat)(ரூ) மில்லியன்	ஒப்பந்த காலம்	வேண்டப்படும் தரம்	வேண்டப்படும் கேள்விப் பிணை	
						பிணை வைப்பு	செல்லுபடியாகும் காலம்
05	NP/14/41(12)/2/ Council/ (2019)2021/32	தலைமை அலுவலகத்தில் முன்பக்க மதில், காவலாளி அறை, களஞ்சியம் புனரமைப்பு (J/381)	1.433	60 நாட்கள்	C9 & C8	14,500.00	14.03.2022

தலைவர்,
உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,
வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச சபை,கரவெட்டி,
வடக்குமாகாணம்

13.12.2021

மீள் கேள்வி அறிவித்தல் - 2022
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட, கீழ்க்குறிப்பிடப்படும் பொதுச்சந்தைகள், துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்புநிலையம், இறைச்சிக்கடைகள் மற்றும் கருவாட்டுக்கடை என்பவற்றை 2022.01.01 ஆம் திகதி தொடக்கம் 2022.12.31 ஆம் திகதிவரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித் திகதி : 28.12.2021 மதியம் 12.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி : 28.12.2021 பி.ப 2.00 மணிவரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 28.12.2021 பி.ப 2.30 மணி
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் : வலிகாமம்தென்மேற்குபிரதேச சபை, தலைமைஅலுவலகம், மானிப்பாய்.

இல	பொதுச்சந்தைகள்(துவிச் சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம், பொது மலசல கூடம், இறைச்சிக் கடைகள் விபரம்)	மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம்	மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம்	ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை	மாதாந்த வாடகை
மானிப்பாய் பட்டின உப அலுவலகம்					
01	மானிப்பாய் பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை (புதியகட்டிடத் தொகுதி)	1,000.00	2,500.00	322,525.00	600.00
02	மானிப்பாய் பொதுச் சந்தை கருவாட்டுக் கடை அல்லது மாமிசம் பதனிடும் கடை (புதியகட்டிடத் தொகுதி)	1,000.00	5,000.00	9,130.00	600.00
மானிப்பாய் கிராம உப அலுவலகம்					
01	காக்கைதீவுப் பழையமீன் சந்தைக் கட்டிடம் . (கடலுணவுகள் களஞ்சியப்படுத்துவதற்கு மாத்திரம்)	500.00	1,500.00	21,850.00	
02	நவாலி பிரசாத் சந்தை கோழியிறைச்சிக் கடை	500.00	1,500.00	19,950.00	300.00
03	சாவற்கட்டுச் சந்தை	1,000.00	3,500.00	288,850.00	
04	ஆனைக்கோட்டைச்சந்தி மாட்டிறைச்சிக்கடை	1,000.00	5,000.00	285,090.00	
பண்டத்தரிப்புபட்டின உப அலுவலகம்					
01	பண்டத்தரிப்புப் பொதுச் சந்தை	1,000.00	18,000.00	2,300,680.00	
02	பண்டத்தரிப்புப் பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை	1,000.00	5,000.00	491,150.00	2,250.00
பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்					
01	மாகியப்பிட்டிப் பொதுச் சந்தை	1,000.00	2,000.00	201,190.00	
02	இளவாலைப் பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை	1,000.00	1,500.00	91,960.00	
03	மாதகல் பொதுச்சந்தை	1,000.00	3,000.00	263,340.00	
04	மாதகல் பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை	500.00	1,500.00	24,880.00	750.00

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 2021.10.29 ஆம் திகதிய உதயன், தினக்குரல் பத்திரிகைகளிலும், தலைமைஅலுவலகம், உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

2021.12.15

அ.ஜெயநேசன், தவிசாளர்,
வலிகாமம் தென்மேற்குபிரதேச சபை,
மானிப்பாய்.

வடக்கு மாகாண கூட்டத்தில் தமிழ்மொழிக்கு இடம் இல்லை

- வெளிநடப்புச் செய்தார் சிறிதரன்-

வடக்கு மாகாண ஆளுநர் கூட்டிய கூட்டத்தில் தமிழ்மொழிக்கு இடம் இல்லாத காரணத்தால் கூட்டத்தில் கலந்து கொள்ள விரும்பவில்லை எனத் தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் வெளியேறினார்.

வடக்கு மாகாணத்தின் நிலமைகள் தொடர்பில் புதிய ஆளுநரால் ஜீவன் தியாகராஜாவினால் முதன் முதலாக நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை கைதடியில் உள்ள பிரதம செயலாளர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது கலந்துகொண்ட ஆளுநர் முதல் பிரதம செயலாளர், அதிகாரிகள் என அனைவருமே ஆங்கிலத்தில் மட்டுமே உரையாற்றிய சமயம் தமிழில் உரையாற்றாத சந்தர்ப்பத்தில் அதற்கான தமிழ் மொழி பெயர்ப்பை வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் கோரிக்கைக்கு பலன் கிட்டாது தொடர்ந்தும் ஆங்கிலத்தில் மட்டுமே உலையாடல் நீடித்தது.

இதனால் விரக்தி அடைந்த நாடாளுமன்ற உறுப்பினர் தமிழ் மக்களை கொண்ட மாகாண சபையில் தமிழ் மொழியே இல்லாத இக் கூட்டத்தில் தொடர்ந்தும் பிரசன்னமாகியிருக்க நான் விரும்பாத காரணத்தினால் இந்தக் கூட்டத்தில் இருந்து வெளியேறுகின்றேன் எனத் தெரிவித்து வெளியேறினார்.

ஊடகவியலாளருக்கு கருத்து தெரிவிக்கையில், எமது போராட்டம். முதல் எமது மக்களின் அடிப்படை உரிமைகள் வரையில் மொழி ரீதியானது. அதேநேரம் இந்த மொழிக்காவும. பலரை இழந்தோம்.

அதேநேரம் தமிழ் மக்களிற்கான தனி மாகாணமாக தற்போது எஞ்சியிருக்கும் மாகாணத்தில் கோரிக்கை விடுத்தும் தமிழ் மொழிக்கு இடம் இல்லாதபோது அந்தக் கூட்டத்தில் எதற்காக பங்குகொள்ள வேண்டும் என்றார். (75)

தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியால் யாழ்.மாநகரசபையின் வரவு-செலவுத் திட்டத்தைத் தோற்கடிக்க முயலக் கூடாது

-அனந்தி சசிதரன் காட்டம்-

யாழ்.மாநகரசபையின் வரவு செலவுத் திட்டத்தைத் தோற்கடிப்பதற்காகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இணைவதாகச் செய்தியொன்று வெளியாகியிருக்கிறது.

யாழ்.மாநகரத்தை ஓர் தூய நகரம், அழகிய நகரமாக மாற்றுவதற்கு ஓர் வாய்ப்பைக் கொடுத்துப் பார்க்க வேண்டிய தேவையிருக்கிறது. இந்நிலையில் தனிப்பட்ட ரீதியான காழ்ப்புணர்ச்சி அல்லது அரசியல் கட்சி ரீதியான காழ்ப்புணர்ச்சிகளை வைத்துக் கொண்டு சில நல்ல விடயங்களைச் செய்வதை வரவேற்காமல் ஒதுக்கி எதிரிக்குச் சகுனப் பிழையென்று மூக்கை அறுக்கின்ற நிலைக்குச் செல்லக் கூடாது என முன்னாள் வடக்கு மாகாண அமைச்சரும், ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகத்தின் தலைவருமான திருமதி.அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அனந்தி சசிதரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாநகரசபையின் வரவு-செலவுத் திட்டம் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் மாநகரசபை உறுப்பினர்களிடம் அந்த வரவு செலவுத் திட்டம் கையளிக்கப்பட்டிருக்கும். அதில் பிழையான அல்லது ஏற்றுக் கொள்ள முடியாத விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தால் எழுத்துமூலம் மேயருக்கு வழங்கப்பட வேண்டும். அவ்வாறு கொடுத்து மாநகர மேயர் ஏற்றுக் கொண்டாரா? அல்லது நிராகரித்தாரா? என்பது தொடர்பில் கவனிக்க வேண்டும்.

தற்போதைய நிலையில் சரி, பிழைகளுக்கு அப்பால் தமிழ்த் தேசிய அரசியலைக் கட்டியெழுப்ப அனைவரும் முன்வர வேண்டும்.

கடந்த வடக்கு மாகாணசபையின் ஆட்சிக் காலத்தில் யாழ்.நகரத்தை ஓர் அழகாகக் கொண்டுவர வேண்டும் என்ற எதிர்பார்ப்பும், ஆவலும் எங்களிடமுமிருந்தது. ஆனாலும், எங்களால் அதனைச் செய்ய முடியவில்லை. யாழ்.மாநகரத்தை ஓர் அழகிய நகரமாக மாற்ற வேண்டியது அவசிய தேவையாக உள்ளது. இந்நிலையில் தற்போதைய யாழ்.மாநகரசபை நிர்வாகம் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளனர். இதுதொடர்பான சில ஒப்பந்தங்களையும் செய்வதற்குத் தற்போதைய நிர்வாகத்தினர் மேற்கொள்வதற்குத் தயாராகவுள்ளனர்.ஏனெனில், யாழ்.மாநகரசபையின் வரவு-செலவுத் திட்டம் இம்முறை முதன்முறை தோற்கடிக்கப்பட்டு இரண்டாம் தடவையும் தோற்கடிக்கப்பட்டால் மாநகரசபையின் நிர்வாகம் அரசின் பக்கம் சென்றுவிடும். யாழ்.மாநகரசபையின் ஆணையாளரின் கைகளுக்குச் சென்றுவிடும் என்றார். (18)

கிளிநொச்சி பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்களைப் பார்வையிட்டார் நீதிபதி

கிளிநொச்சி -முகமாலை பகுதியில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையின் போது தமிழீழ விடுதலைப்புலிகளுடையது என நம்பப்படும் மனித எச்சங்கள், ஆயுத தளபாடங்களை கிளிநொச்சி நீதிமன்ற நீதிவான் பார்வையிட்டுள்ளார்.

குறித்த மனித எலும்புக்கூட்டு எச்சங்கள், ஆயுத தளபாடங்களை நேற்று நீதிவான் பார்வையிட்டுள்ளார்.பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முகமாலைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையின் போது தமிழீழ விடுதலைப்புலிகளுடையது என நம்பப்படும் மனித எலும்புக்கூட்டு எச்சங்கள், ஆயுத தளபாடங்கள் உட்பட்ட வெடிபொருட்கள் பல கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.

குறித்த பொருட்கள் தொடர்பில் பளைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ள நிலையில் பளை பொலிஸாரால் கிளிநொச்சி நீதிமன்றின் கவனத்திற்கு குறித்த விடயம் கொண்டு செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையிலான விவாத போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு

இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இலங்கையிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையிலான தமிழ் மொழி மூலமான விவாத போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா நேற்றுமுன் தினம் கொழும்பு இலங்கை மன்ற பயிற்சி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த நவம்பர் மாதம் 19ஆம் திகதி அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற குறித்த விவாத போட்டியில், முதலாம் இடத்தினை வலிகாமம் தென்மேற்கு - மானிப்பாய் பிரதேச சபையின் விவாத அணி பெற்றுக்கொண்டது.

அதேவேளை இரண்டாமிடத்தினை மட்டக்களப்பு மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேசசபை பெற்றதுடன் மூன்றாமிடத்தினை புதுக்குடியிருப்பு பிரதேசபை பெற்றுக்கொண்டது.

முதலாமிடத்தை பெற்றுக் கொண்ட மானிப்பாய் பிரதேசசபையின் விவாதகுழுவில் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன், உறுப்பினர்களான அருட்குமார் ஜோன் ஜிப்பிரிக்கோ, கந்தையா ஜெசிதன், லோகப்பிரகாசம் ரமணன், சிவசண்முகநாதன் அனுசன் உள்ளிட்டவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

அணியின் தலைவராக உறுப்பினர் கந்தையா ஜெசிதன் செயற்பட்டிருந்தார். (75)

வவுனியாவில் விபத்து ஒருவர் படுகாயம்

வவுனியா குட்செட் வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. குறித்த விபத்து சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. வவுனியாவிலிருந்து குட்செட்வீதியில் சென்ற மோட்டார் சைக்கிளும், முச்சக்கர வண்டியும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த திருகோணமலையைச் சேர்ந்த கேதீஸ்வரன் (வயது-41) என்பவரே படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நானாட்டான் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு நிறைவேற்றம்

நானாட்டான் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் குழப்பங்களுக்கு மத்தியில் நிறைவேறியுள்ளது.

நானாட்டான் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் சபை அமர்வு தவிசாளர் திருச்செல்வம் பரஞ்சோதி தலைமையில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம் பெற்றது.

கூட்டம் ஆரம்பமாகியதிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும், எதிர் தரப்பினருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம் பெற்றது.

எனினும் வரவு-செலவு திட்டத்திற்கான வாக்கெடுப்பு பகிரங்கமாக இடம் பெற்றது. இதன் போது நானாட்டான் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் மேலதிகமான ஒரு வாக்கினால் நிறைவேறியுள்ளது.

ஆதரவாகத் தலைவர் உள்ளிட்ட 7 உறுப்பினர்களும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஒருவர் உள்ளடங்கலாக 8 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

தவிசாளரின் மேலதிக வாக்கினால் வரவு-செலவு திட்டம் வெற்றி பெற்றது. வரவு-செலவு திட்டத்திற்கு எதிராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், உதய சூரியன் உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த 7 உறுப்பினர்கள் வாக்களித்தனர். ஈ.பி.டி.பி.கட்சி உறுப்பினர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

இந்த நிலையில் நானாட்டான் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு வெற்றி பெற்றது.

விக்னேஸ்வரனுக்கு அனுபவம் போதாது; மனே,ஹக்கீம் ஒற்றையாட்சியை ஏற்றோர்

-கஜேந்திரகுமார் தெரிவிப்பு-

விக்னேஸ்வரனுக்கு இன்னும் அரசியல் அனுபவம் போதாது என அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். 13-ஆவது திருத்தத்தை வலியுறுத்தும் மனோ கணேசன் மற்றும் ரவூப் ஹக்கீம் ஏற்கனவே ஒற்றையாட்சியை ஏற்று செயற்படுபவர்கள்தான் தான் எனவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

பதின்மூன்றாம் திருத்தம் தொடர்பில் இந்தியாவுக்கு அழுத்தத்தை கொடுப்போம் என கூடிய தமிழ் கட்சிகளில் கூட்டத்தில் விக்னேஸ்வரனும் பங்கெடுத்துள்ளார்.

அதன்பின் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது உண்மையை அவரே தன் வாயால் போட்டு உடைத்துவிட்டார். இலங்கையில் இந்தியாவுக்கு இருக்கும் ஒரே பிடி 13-ஆவது அரசியல் அமைப்புதான். அதனை நீக்குவதற்கு நாம் அனுமதிக்க முடியாது என அவரே வெளிப்படையாக கூறியிருந்தார். புதிய அரசியலமைப்பு வேண்டாம். இருக்கிற 13 ஐ பாதுகாப்போம் என்ற நிலைப்பாட்டில் அவர் இருக்கிறார் என எமக்குத் தெளிவாக விளங்குகிறது.

மனோ கணேசன் மற்றும் ஹக்கீம் ஒற்றையாட்சியின் கீழ் செயற்படுபவர்கள் அவர்களின் அரசியல் வேறு வடகிழக்கில் தமிழ் மக்களுடைய அரசியல் வேறு. அதை அவர்கள் தெளிவாக விளங்கி இருப்பார்கள் எனவும் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

ஆனால் 13 ஐ வலியுறுத்தும் கூட்டத்தில் அவர்கள் பங்கேற்றமை எமக்குக் கவலை அளிக்கிறது.

நான் பாதுகாப்பு அமைச்சின் வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் ஒற்றை ஆட்சி தொடர்பில் தெளிவாக கூறியபோது மனோ கணேசன் என்னைப் பாராட்டினார்.

நாங்கள் தெற்கில் சிங்கள வர்களோடு சேர்ந்து அரசியல் செய்கிறவர்கள் இதைப்பற்றி பேச முடியாது. நீங்கள் தெளிவாகப் பேசியது நல்லது என்றார்.

அதேபோன்று ஹக்கீம் முஸ்லிம்களின் பெருந்தலைவர் அஸ்ரப்புக்கு பின்னர் ஆளுமை உள்ள தலைவராக செயற்பட்டு வருகிறார்.

ஒற்றை ஆட்சியினால் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டு வரும் நிலையில் அதனை உணர்ந்து அவர் செயற்படுவார் என நம்புகிறேன்.

தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையே சில சிக்கல்கள் இருக்கலாம். அதனை நாம் பேசித் தீர்க்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

13-ஆவது திருத்தம் தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒற்றையாட்சியின் கீழ் வாழ்வதற்கான சூழலை உருவாக்கும். இதனை தமிழ் - முஸ்லிம் அரசியல்வாதிகள் உணர்ந்து செயற்படுவார்கள் என நம்புகிறேன் எனவும் கஜேந்திரகுமார் மேலும் தெரிவித்தார்.

(ச-75)

நல்லூர் சிவன்கோயிலில் நடைபெற்ற திருவிளையாடல் நிகழ்வு

இறைவன பிரம்மாவின் ஆணவம் நீங்கும் வண்ணம் அவரது ஐந்தாவது தலையை கிள்ளி அகற்றி, நான்முகனாக்கிய நிகழ்வு அட்டவீரச்செயல்களுள் ஒன்றாக குறிப்பிடப்படுகிறது.

'பரமனை மதித்திடா பங்கையாசனன் ஒரு தலை கிள்ளியே..' என்று இந்நிகழ்வை புராணம் பேசும்.

ஆணவம் அகற்றி அருளொளி பரப்பிய இந்த திருவிளையாடல் நேற்று முன்தினம் நல்லூர் சிவன் கோயிலில் உற்சவமாக நிகழ்த்தப்பட்டது.

படங்கள் - ஐ.சிவசாந்தன்

கால்நடை கட்டி வளர்க்குமாறு நல்லூர் பிரதேச சபை அறிவுறுத்து

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் ஆடுகள் மற்றும் மாடுகளை வீடுகளில் கட்டி வளர்க்குமாறு நல்லூர் பிரதேச நிர்வாகம் கால்நடை வளர்ப்பாளர்களுக்கு நேற்று ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் விடுத்தது வீடுகளில் கட்டி வைத்து வளர்க்க வேண்டிய ஆடுகள், மாடுகளை கட்டாக்காலிகளாக வீதிகளில் விடுவதனால் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுவதுடன், விபத்துக்களும் ஏற்படுகின்றன.

எனவே, இதனைக் கருத்திற்கொண்டு கால்நடைகளை வீடுகளில் கட்டி வளர்க்குமாறு நல்லூர் பிரதேச சபை கேட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் கட்டாக்காலிகளாக கட்டவிழ்த்துத் திரியும் ஆடுகள், மாடுகளை நல்லூர் பிரதேச சபையினர் கையகப்படுத்துவதுடன், அதற்கான தண்டமும் அறவிடப்படும் என நல்லூர் பிரதேச சபை நிர்வாகம் தனது அறிவித்தலில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (18)

இனப்பிரச்சினைக்கு அடியே அரச காணிகள் பகிர்ந்தளிப்பதுதான்

- யாழ்.எம்.பி., எம். ஏ.சுமந்திரன்-

காணிப்பிரச்சினை ஒரு பெரிய பிரச்சினை மிகமுக்கியமான பிரச்சினை இனப்பிரச்சினைக்கு அடியே அரச காணிகள் பகிர்ந்தளிப்பதுதான் இதுதான் பிரச்சினை என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஊடக பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கில் உள்ள மக்களின் காணிப்பிணக்குகள் தொடர்பான மக்கள் கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனை தெரிவித்துள்ளார்

நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் மக்கள் எதிர்கொள்ளும் காணிப்பிணக்குகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

மாந்தை கிழக்கு பிரதேச சபை மண்டபத்தில் தவிசாளர் ம.தயானந்தன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சித்தார்த்தன், வினோநோகராதலிங்கம், மற்றும் முன்னால் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா,வடமாகாண முன்னால் விவசாய அமைச்சர் க.சிவனேசன் முன்னாள் உறுப்பினர்களான றிப்ஹான் பதியூதீன்,ஆ.புவனேஸ்வரன், உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொண்டுள்ளார்கள்.

இதன் போது மாந்தை கிழக்கு பிரதேசத்தில் மக்கள் எதிர்கொள்ளும் காணிப்பிணக்குகள் தொடர்பில் எடுத்துரைத்துள்ளார்கள்

வனவளத்திணைக்களம் மற்றும் ஏனைய அரச திணைக்களங்களால் மக்களின் பூர்வீக வயல் நிலங்கள் காணிகள் விடுவிக்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

இங்கு வாழ்கின்ற மக்களின் நீண்ட கலா காணிப்பிணக்குகளை காணிக்கான உரிமையினை பெற்றுக்கொடுக்க காணிகளை வழங்கவேண்டும் அதன் பின்னர் உள்ள காணிகளை லீசிங்கில் வழங்கவேண்டும். ஆனால் அரச திணைக்களம் லீசிங்கில் வெளிமாவட்டத்தினை சேர்ந்தவர்களுக்கு அதிகளவில் காணிகளை வழங்குகின்றது சாதாரண மக்களின் காணிப்பிரச்சினைகளை கண்டுகொள்ளவில்லை என்ற பல்வேறு குற்றச்சாட்டு மக்களால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் காணி பிணக்குகள் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ளார்.

இந்த காணி பிணக்கிற்கு கொள்கை வகுத்தல் ஒன்று செய்யவேண்டும் அதனை நாங்கள் செய்வோம் தீர்ப்பதற்கான நடவடிக்கையினை எடுப்போம் யாருக்கு முன்னுரித்து என தீர்மானிக்க வேண்டும் இவ்வாறான விடயங்களை கொள்கை வகுப்பாக செய்து வடக்கு மாகாணத்தில் உள்ள எல்லா காணிப்பிரச்சினைக்கும் பொதுவாக அமுல்படுத்த வேண்டும் என தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது

ஒவ்வொரு விடயத்தினையும் ஆவணப்படுத்தி கொள்கைவகுப்பிற்கு சமர்ப்பணம் செய்யவேண்டும் இதற்கு ஒரு குழுவினை நியமித்து விடயங்களை நிரல்படுத்தி அதனை எங்களுக்கு தந்தால் நாங்கள் கொள்கையினை வகுக்கமுடியும்

அரசகாணி முதல் இருந்த கொள்கைவந்து வித்தியாசம்,ஆனால் அரச காணியில் பயிர் செய்பவர்களுக்கு உரித்து இருக்கின்றது சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாக இருந்தது

திருகோணமலை மாவட்டத்தில் இவ்வாறான பிரச்சினை வழக்கு வைத்து இடைக்கால உத்தரவும் எடுத்துள்ளோம். தொல்பொருள்திணைக்களத்தின் பிரச்சினை.

இப்போது சட்டத்தினை உபயோகிக்கும் விதம் மாறியுள்ளது அது மத்திய அரசாங்கத்திடம் இருந்துதான் வருகின்றது அதற்காகத்தான் நாங்கள் சொன்னாங்கள் அந்த அதிகாரம் சட்டப்படி மத்திய அரசாங்கத்தில் இல்லை மாகாண அரசிடம்தான் இருக்கின்றது

இருக்கின்ற அதிகாரத்தினை உறுதிப்படுத்து இது எங்களின் அதிகாரம் என்று நாங்கள் கொள்கையினை வகுக்கவேண்டும் இது ஒரு பெரிய பிரச்சினை மிகமுக்கியமான பிரச்சினை இனப்பிரச்சினைக்கு அடியே அரச காணிகள் பகிர்ந்தளிப்பதுதான் இதுதான் பிரச்சினை

1957 ஆம்ஆண்டு 1965 ஆம் ஆண்டு ஒப்பந்தத்திலும் அதுதான் பிரதானமாக வைக்கப்பட்டது எனவே, காணிதான் ஒரு அடிப்படை பிரச்சினை இது சாதாரணபிரச்சினை இல்லை உங்கள் ஒத்துழைப்புடன் உங்கள் சவால்களை நிரல்படுத்தி தந்தால் நாங்கள் எங்களால் இயன்றதை செய்வோம், என்றும் அவர் தெரிவித்துள்ளார். (15)

மரண அறிவித்தல்

தோற்றம் 30 * 03 * 1943

மறைவு 14 * 12 * 2021

யோசேப் அந்தோனிப்பிள்ளை பாலசிங்கம்

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோசேப் அந்தோனிப்பிள்ளை பாலசிங்கம் அவர்கள் நேற்று (14.12.2021) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ் சென்றவர்களான யோசேப் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மோஸஸ் - மரியம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் மாஜொரி (மாஜி) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான செல்லமணி, ரெட்ணசிங்கம், தனசிங்கம், மற்றும் சிறப்பின், பிலோமினா(ஜேர்மன்), அல்பேட் (குட்டித்தம்பி - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் தாரணி, யைல்ஸ், சுபாஜினி, றாஜி, எமில்ஸ், மாத்தா, ஜான் ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகேந்திரன், றோகினி, பீற்றர், தயாளன்(பிரான்ஸ்), சுரேஸ், மேரி ஆகியோரின் அன்பு மாமனாரும் சோபாக் ஜெறோம், யூலின், பிறிதீவ், ஜெறோஸ், விஷால், ஈத்தன், வேஜில், ஷெறோன், ஜெறி, வர்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று (15.12.2021) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

214, 2ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்
தொ.பே : 0778833493

விண்ணக வாழ்வின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
கதிரவேற்பிள்ளை அரியரட்ணம்
(அரியம்)

மலர்வு 28.10.1950 உதிர்வு 20.11.2018



ஆண்டுகள் மூன்று ஆனபோதும் எம் நெஞ்சில் ஆறாத வடுக்களாய் உங்கள் நினைவுகள்
எத்தனை இன்பம் எம் வாழ்வினில் வந்தபோதும் அத்தனையும் தாண்டிய துன்பமாய் உங்கள் பிரிவு
கள்ளம் கபடமில்லா உங்கள் சிரிப்பு கண்டிப்புடன் கூடிய உங்கள் பாசம்
எதையும் துணிந்து சாதிக்கும் வல்லமை அத்தனையும் விட்டுச் சென்றீரே எங்களுடன்
ஆலவிருட்சமாய் அவணியிலே வாழ்ந்து - எமை பார்போற்ற ஆளாக்கி இன்பம் கண்டவரே
உங்களை நினைத்து தினம் வாடித் தவிக்கின்றோம்
விடியும் பொழுதெல்லாம் உங்கள் நினைவே எங்கள் மனதெல்லாம்...
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் உங்கள் அன்பு மனைவி, ஆருயிர்ப் பிள்ளைகள், பாசமிகு மருமக்கள், அன்புப் பேரப்பிள்ளைகள்.

பழைய பொலிஸ் நிலைய வீதி ,வல்வெட்டி T.P.0775654270

-முதலாவது ரி-20 போட்டி

பாகிஸ்தான் அணியிடம் வீழ்ந்தது மேற்கிந்திய தீவுகள்

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான முதலாவது ரி20 போட்டியில் 63 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் சென்று இருக்கும் மேற்கிந்திய அணி, அந்த நாட்டு அணிக்கு எதிராக மூன்று ரி-20 மற்றும் 3 ஒருநாள் போட்டியில் விளையாடுகிறது.

மேற்கிந்திய அணியில் 3 வீரர்கள் உள்பட 4 பேர் கொரோனா பாதிப்புக்கு உள்ளாகி தனிமைப்படுத்தப்பட்டு இருக்கும் நிலையில் பாகிஸ்தான்- மேற்கிந்திய அணிகள் இடையிலான முதலாவது 20 ஓவர் கிரிக்கெட் போட்டி திட்டமிட்டபடி கராச்சியில் நேற்று நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்திய அணி களத்தடுப்பை தேர்வு செய்தது. இதன்படி முதலில் துடுப்பாட்டம் செய்த பாகிஸ்தான் அணியின் கப்டன் பாபர் அசாம் ஓட்டம் எதுவும் எடுக்காமலும், பஹர் ஜமான் 10 ஓட்டத்திலும் அடுத்தடுத்து ஆட்டம் இழந்தனர்.

இதனால் 35 ஓட்டத்துள் (4.5 ஓவர்களில்) 2 விக்கெட்டுகள் இழந்து தடுமாறிய அந்த அணியை 3 ஆவது விக்கெட் இணையான முகமது ரிஸ்வான் 78 ஓட்டங்கள், ஹைதர் அலி 68 ஓட்டங்கள் ஆகியோர் அடித்து ஆடி சரிவில் இருந்து மீட்டதுடன் வலுவான நிலைக்கு உயர்த்தினார்கள்.

20 ஓவர்களில் பாகிஸ்தான் அணி 6 விக்கெட்டுக்கு 200 ஓட்டங்கள் குவித்தது. கடைசி கட்டத்தில் அதிரடி காட்டிய முகமது நவாஸ் 10 பந்துகளில் 3 பவுண்டரி, 2 சிக்சருடன் 30 ஓட்டங்கள் எடுத்து களத்தில் இருந்தார்.

பின்னர் 201 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய மேற்கிந்திய அணி 19 ஓவர்களில் 137 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் பாகிஸ்தான் அணி 63 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் தரப்பில் முகமது வாசிம் 4 விக்கெட்டும், ஷதப் கான் 3 விக்கெட்டும் சாய்த்தனர். இந்த வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

தேசிய கிரிக்கெட் அணிப் பயிற்றுவிப்பு அலோசகராக மஹேல நியமனம்

இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜெயவர்தன 2022 ஜனவரி 1 ஆம் திகதி முதல் ஒரு வருட காலத்திற்கு தேசிய கிரிக்கெட் அணிக்கான பயிற்றுவிப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜெயவர்த்தனவின் புதிய நியமனத்தின் கீழ், அவர் தேசிய ஆண்கள் அணியைத் தவிர அனைத்து தேசிய அணிகளின் கிரிக்கெட் பிரிவின் பொறுப்பாளராக இருப்பார்.

இலங்கை கிரிக்கெட்டின் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்து, இலங்கை கிரிக்கெட் நிர்வாகக் குழுவால் மஹேல ஜெயவர்தன குறித்த பொறுப்புக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

பொதுமக்களுக்கான அறிவித்தல்

பின்வருவன ஊடாக நீங்கள் பெற்றுக்கொண்ட வெளிநாட்டு நாணயத்தை உங்கள் உடமையில் வைத்திருப்பீர்களாயின்...

I. வெளிநாட்டு பயணத்திற்காக வங்கியொன்றிலிருந்து அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நாணயமாற்றுநரிடமிருந்து கொள்வனவுசெய்து, பயன்படுத்தாது இலங்கைக்கு திருப்பிக் கொண்டுவரப்பட்டவை (ஐ.அ.டொலர் 15,000 வரை அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக),

II. வெளிநாட்டு பயணத்திற்காக தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து (PFCA) மீளெடுப்புச்செய்தல் (ஐ.அ.டொலர் 15,000 வரை அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக),

III. வெளிநாட்டிலிருக்கும் போது தொழில், தொழில்சார்நிபுணத்துவம் அல்லது வியாபாரம் என்பவற்றிலிருந்தான வருவாய்கள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டவை,

IV. சிறப்பு வைப்புக் கணக்கில் (SDA) வைப்பிலிடுவதற்காக 2020 சனவரி 01 அன்று அல்லது அதற்கு பின்னர் பெற்று இலங்கைக்கு கொண்டுவரப்பட்டவை.

அத்தகைய வெளிநாட்டு நாணயங்களை நீங்கள்,

- 2021 திசம்பர் மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலரொன்றுக்கு இலங்கை ரூபா 210* ற்கு (அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக) ஏதேனும் வங்கியில் இலங்கை ரூபாவாக மாற்றலாம்; அல்லது
- 2021 திசம்பர் மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலரொன்றுக்கு இலங்கை ரூபா 210* ற்கு (அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக) ஏதேனும் வங்கியிலுள்ள இலங்கை ரூபா கணக்கில் வைப்பிலிடலாம்; அல்லது
- உங்களது தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கில் (PFCA) அல்லது சிறப்பு வைப்புக் கணக்கில் (SDA) வைப்பிலிடலாம்;
- உங்களது வங்கியூடாக இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடு செய்யலாம்.

* செலாவணி வீதம்: ரூ.200 + விசேட ஊக்குவிப்பு ரூ.10

குறிப்பு: இலங்கை மத்திய வங்கி மூலம் மேற்குறித்தவை தொடர்பிலான அவசியமான அறிவுறுத்தல்கள் அனைத்து வங்கிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
☎ 0112477255 0112477716 dfe@cbsl.lk www.dfe.lk

மாகாண மட்ட எல்லே போட்டி இரு பிரிவிலும் யாழ். சம்பியன்

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினரால் நடத்தப்பட்ட மாவட்ட அணிகளுக்கிடையிலான எல்லே போட்டியில் ஆண்கள் பெண்கள் என இரு பிரிவுகளிலும் யாழ்.மாவட்ட அணி சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனர்.

இதன் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்றது. ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து முல்லைத்தீவு மாவட்ட அணி மோதியது. இதில் யாழ்.மாவட்ட அணி 5:4 என்ற ஓட்ட எண்ணிக்கையில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனர். 3ஆம் இடத்திற்கான போட்டியில் கிளிநொச்சி மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதியது. இதில் கிளிநொச்சி மாவட்ட அணி 7:2 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 3 ஆம் இடத்தை பெற்றனர்.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட அணி மோதியது. இதில் யாழ்.மாவட்ட அணி 5:2 என்ற ஓட்ட எண்ணிக்கையில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனர். 3ம் இடத்திற்கான போட்டியில் வவுனியா மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதியது. இதில் வவுனியா மாவட்ட அணி 3:2 என்ற ஓட்ட எண்ணிக்கையில் வெற்றி பெற்று 3ஆம் இடத்தை பெற்றனர்.

(21)

தம்புள்ளை ஜெய்ன்ட் அணியை வீழ்த்தியது ஜப்னா கிங்ஸ் அணி

லங்கா பிரீமியர் லீக் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் தம்புள்ளை ஜெய்ன்ட்ஸ் அணியை 7 விக்கெட்டுகளினால் வீழ்த்திய ஜப்னா கிங்ஸ் அடுத்த சுற்றுக்கு முதல் அணியாக முன்னேறியுள்ளது.

2021 லங்கா பிரீமியர் லீக் ரி-20 கிரிக்கெட் தொடரின் 14 ஆவது போட்டி கொழும்பு, ஆர்.பிரேமதாச மைதானத்தல் திசர பெரேரா தலைமையிலான ஜப்னா கிங்ஸ், தசுன் சானக்க தலைமையிலான தம்புள்ளை ஜெய்ன்ட்ஸ் அணிகளுக்கு இடையில் ஆரம்பமானது.

போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற ஜப்னா கிங்ஸ் முதலில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பினை தம்புள்ளை அணிக்கு வழங்கியது.

எனினும் ஜப்னா அணியினரின் சுழல் பந்து வீச்சுக்கு தாக்கு பிடிக்க முடியாத அவர்களினால் 14.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்து, 69 ஓட்டங்களை மாத்திரமே எடுக்க முடிந்தது.

லங்கா பிரீமியர் லீக் போட்டி வரலாற்றில் ஒரு அணி எடுத்த குறைந்த ஓட்ட எண்ணிக்கை இது அமைந்தது.

ஜப்னா அணி சார்பில் பந்து வீச்சில் அசத்திய சதுரங்க டிசில்வா 4 ஓவர்களில் 16 ஓட்டங்களை வழங்கி நான்கு விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

அவர் தவிர மகேஷ் தீக்ஷன 3 விக்கெட்டுகளையும், வனிந்து ஹசரங்க மற்றும் அசேன் பண்டார ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினையும் வீழ்த்தினார்கள்.

70 ஓட்டம் என்ற இலகுவான வெற்றி இலக்கினை துரத்திய ஜப்னா கிங்ஸ், 7 விக்கெட்டுகளும், 64 பந்துகளும் மீதமிருந்த நிலையில் 71 ஓட்டங்களை பெற்று இலக்கினை கடந்தது.

வெற்றி இலக்கினை துரத்தும்போது ஜப்னா சார்பில் ஆரம்ப வீரராக களமிறங்கிய உபுல் தரங்க 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும், அதன் பின்னர் களமிறங்கிய வனிந்து ஹசரங்க அவிஷ்க பெர்ணாடோவுடன் இணைந்து அதிரடி காட்டினார்.

அணியின் பெறுமதிமிக்க வீரரான வனிந்து ஹசரங்க, இதுவரை ஆடிய ஆட்டங்களில் ஓட்டங்களை குவிக்க தவறிய நிலையில் நேற்று கிடைத்த வாய்ப்பினை கச்சிதமாக பயன்படுத்தி 18 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகள் அடங்கலாக 37 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தார்.

எனினும் 4 ஆவது விக்கெட்டுக்காக அவிஷ்க பெர்னாண்டோ - அசேன் பண்டார ஜோடி சேர்ந்து தடுப்பெடுத்தாட 9.2 ஓவர்களில் 71 ஓட்டங்களை பெற்று, தொடரில் 5 ஆவது வெற்றியை பதிவு செய்தது ஜப்பான கிங்ஸ்.

போட்டியின் ஆட்ட நாயகன் விருது சதுரங்க டிசில்வாவுக்கு வழங்கப்பட்டது.

மகளிர் கால்பந்து போட்டி இந்தியா அசத்தல் வெற்றி

வங்காளதேசத்தில் நடந்து வரும் மகளிர் சாம்பியன்ஷிப் கால்பந்து தொடக்க போட்டியில் இந்தியா வெற்றி பெற்றுள்ளது.

வங்காளதேசத்தின் டாக்கா நகரில் நடந்து வரும் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் சாம்பியன்ஷிப் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் இந்தியா 5-0 என்ற புள்ளி கணக்கில் இலங்கையை வீழ்த்தி வெற்றி பெற்றுள்ளது.

இதில் இந்திய அணிக்காக, நீத்து லிண்டா 2 கோல்களும், சந்தோஷ், கேரன் எஸ்டிரோசியா மற்றும் பிரியங்கா தேவி ஆகியோர் தலா ஒரு கோலும் அடித்துள்ளனர். இறுதியாக தேவி அடித்த கோலானது அணியின் வெற்றியை உறுதி செய்தது.

இப்பத்திரிகை ஏரியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை தீர்க்க விரைவில் புதிய சுற்றுநிருபம்

-என்கிறார் கல்வி அமைச்சர் தினேஷ்-

அதிபர்,ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டினை தீர்க்கும் வகையில், அவர்களது ஆவணங்களை வலய கல்வி பணிமனைகளிலிருந்து திரட்டி வருவதாக கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போதே கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் அதிபர்,ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டு பிரச்சினைக்கு தீர்வு வழங்கும் வகையில், எதிர்வரும் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமையினால், இதனை விரைவில் தீர்க்க முடியுமெனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மேலும் அதிபர்ஆசிரியர்களின் ஆவணங்கள் கிடைக்கப் பெற்றவுடன், சம்பள முரண்பாட்டு பிரச்சினையை தீர்க்கும் வகையிலான சுற்று நிருபம் வெளியிடப்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

யா/இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் திறன் வகுப்பறை புனரமைக்கப்பட்டு கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டது. வித்தியால அதிபர் திருமதி எஸ்.நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை அதிபர் திருமதி பத்மஜா பாஸ்கரக் குருக்கள் திறன் வகுப்பறையை திறந்து வைத்தார்.இக்கட்டிட புனரமைப்பு பணிக்கான நிதி யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரனின் 2021 வரவு- செலவுத் திட்ட நிதியொதுக்கீட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கைதியின் வயிற்றில் 56 கிராம் வெள்ளி நகை மீட்பு

வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து அங்குனகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட கைதி ஒருவரின் வயிற்றில் இருந்து 56 கிராம் வெள்ளி நகை மீட்கப்பட்டுள்ளது.

குறித்த கைதி நகையை விழுங்கியதாக கூறப்பட்ட நிலையில், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நேற்று முன் தினம் திங்கட்கிழமை நகையை மீட்டுள்ளனர். இதேவேளை இவரிடம் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதுடன், வெள்ளி நகையும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.சந்தேகநபரை மலம் கழிக்க வைத்திருந்ததாகவும், இதன்போது வெள்ளி நகை நீல நிற கார்பன் பேப்பரில் சுற்றப்பட்டு அதன் பின்னர் வெள்ளை பொலித்தீனில் நன்கு சுற்றப்பட்ட நிலையில் நகைமீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் 51 வயதுடைய நுகேகொட - மிரிஹான பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகின்றது.

மின் விநியோக தடை இனிமேல் இடம்பெறாது

நாட்டில் சில நாட்களாக இருந்து வந்த மின் விநியோக தடை இனிமேல் இடம்பெறாதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தின் தொழிற்பாடுகள் வழமைக்கு திரும்பும் வரையில் நாட்டின் சில பிரதேசங்களில் மாலை 6 மணி முதல் 9.30 வரையான காலப்பகுதியில் அரை மணிநேரம் மின்சார விநியோக தடை கடந்த சில நாட்களாக ஏற்பட்டு வந்தது.இந்த நிலையில், நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தில் செயலிழந்த மின்பிறப்பாக்கியை வழமைக்கு கொண்டு வரும் தொழிற்பாடுகள் இறுதி கட்டத்தை அடைந்துள்ளது.

இதனால், நேற்று செவ்வாய்க்கிழமைமுதல் மின் விநியோக துண்டிப்பு இடம்பெறாது என மின்சார சபை அறிவித்துள்ளது.

தேர்தலை நடத்தும் நிலையில் தற்போது அரசாங்கம் இல்லை

- பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம்-

வரவு- செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே நிதி அமைச்சர் கடன் கேட்டு இந்தியாவிற்குச் செல்லும் நிலைமை தான் தற்போது நாடு இருப்பதாக குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் ஒரு தேர்தலை வைக்கக் கூடிய நிலைமையில் இந்த அரசாங்கம் பொருளாதார ரீதியாகவும் இல்லை, அரசியல் ரீதியாகவும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் கலந்து கொண்டு பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்து மேலும் பேசுகையில்:

நாட்டின் வரவு-செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே நிதி அமைச்சர் கடன் கேட்டு இந்தியாவிற்குச் செல்லும் நிலைமை தான் நாட்டின் தற்போதைய நிலையாக இருக்கின்றது.

கடந்த வருடம் இந்த நாட்டை விட படுமோசமாக இருந்த பங்களாதேசிடம் இலங்கை அரசாங்கம் கடன் வாங்கியிருக்கின்றது. இந்த நிலையில் மாகாணசபைத் தேர்தலையோ இன்னுமொரு தேர்தலையோ வைக்கக்கூடிய நிலைமை இந்த அரசாங்கத்திடம் இல்லை.

எதிர்வரும் மார்ச் மாதத்துடன் உள்ளூராட்சி மன்றங்களும் காலாவதியாகின்றன. சிலவேளைகளில் தேர்தல் நடத்த முடியாவிட்டால் உள்ளூராட்சி சட்டத்தின் படி ஒரு வருடங்கள் நீடிக்கக் கூடிய நிலைமையும் ஏற்படலாம் அல்லது உள்ளூராட்சி மன்றங்களை இல்லாமல் செய்து விட்டு உறுப்பினர்களுக்கான நிதியையும் மீதப்படுத்துகின்றோம் என்ற பெயரில் ஆணையாளர், செயலாளர்களுக்குக் கீழ் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களைக் கொண்டு வரலாம். எதுவும் எந்த நேரமும் நடக்கும்.

ஆனால் ஒரு தேர்தலை வைக்கக் கூடிய நிலைமையில் இந்த அரசாங்கம் பொருளாதார ரீதியாகவும் இல்லை, அரசியல் ரீதியாகவும் பலமிழந்த நிலையில் இருக்கின்றது. அந்த விடயம் அரசாங்கத்திற்கே தெரியும். ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்தில் இருக்கின்ற சில அமைச்சர்கள் கூட இதனை ஒத்துக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலைமையில் அரசாங்கம் தேர்தலுக்குச் செல்லாது.

ஆனால் மகாணசபைத் தேர்தலை வைக்க வேண்டும் என்று நாங்கள் மிக உறுதியாக இருக்கின்றோம். நேற்ற முன் தினம் கூட வடக்கு கிழக்கில் இருக்கக் கூடிய தமிழ்த் தேசியக் கட்சிகள், தமிழ் பேசும் கட்சிகள் அதாவது இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை வரவேற்றும் 13 வது திருத்தச் சட்டத்தை இனப் பிரச்சினைக்கு ஒரு ஆரம்பப் புள்ளியாக ஏற்றுக் கொண்ட கட்சிகள் கூடிக் கலந்துரையாடியிருந்தோம்.

இந்தியா மூலமாக மகாணசபைத் தேர்தல் தொடர்பில் இலங்கைக்கு ஒரு அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும், மாகாண சபைகளுக்கு உரிய முழுமையான அதிகாரங்களைக் கொடுத்து அந்தத் தேர்தலை வைக்க வேண்டும் என்ற வேண்டுகோளினையும் இந்தியாவிற்கு விடுத்திருக்கின்றோம்.

மாகாணசபைத் தேர்தல் நடைபெற்று மாகாணசபை முழு அதிகாரங்களுடன் இருக்குமாக இருந்தால் எமது ஊழியர்கள் இவ்வாறு ஐந்து, ஆறு வருடங்கள் தற்காலிய, அமைய தொழிலாளர்களாக வேலை செய்யக் கூடிய நிலைமை இருக்காது. மாகாணசபைகளுக்கு தற்போது இருக்கும் அதிகாரங்களின் அடிப்படையில் மாகாணசபை நினைத்தால் கூட ஊழியர்களை நிரந்தரமாக்க முடியாது. ஏனெனில் மாகாணசபைகளின் ஊழியர்களுக்கான சம்பளம் மத்திய அரசின் திறைசேரியில் இருந்து தான் வர வேண்டும். திறைசேரியின் அனுமதியைப் பெற்று நியமனம் வழங்கக் கூடிய விதத்திலேயே தற்போதைய மாகாணசபையின் அதிகாரம் இருக்கின்றது.

எனவே இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் படி 13வது திருத்தச் சட்டத்தின் ஊடாக மாகாணசபைகளுக்கு எவ்வாறு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தனவோ அந்த அதிகாரங்கள் அனைத்தையும் உள்வாங்கி அதிகாரங்களைப் பரவலாக்கி இந்த மாகாணசபைத் தேர்தல் வைக்கப்படல் வேண்டும். அவ்வாறான தொரு நிலைமை வருமாக இருந்தால் பல பிரச்சனைகளுக்குத் தீர்வு வரும் என்று தெரிவித்தார்.

எரிவாயு அடுப்பு வெடிப்பில் உயிரிழந்த பெண்ணுக்கு நட்டஈடு கோரி வழக்கு

கண்டி, குண்டசாலை பகுதியில் சமையல் சமையல் எரிவாயு அடுப்பு வெடித்ததால் உயிரிழந்த பெண்ணினது கணவர் மற்றும் அவரது உறவினர்கள் சமையல் எரிவாயு நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடர தீர்மானித்துள்ளனர்.

10 கோடி ரூபா இழப்பீடு கோரி குறித்த வழக்கினை தாக்கல் செய்யவுள்ளதாக உயிரிழந்த பெண்ணின் கணவர் தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் அரசாங்கமோ, அதனுடன் தொடர்புடைய பொறுப்பு வாய்ந்த நிறுவனமோ எந்தவொரு ஆய்வினையும் இதுவரை நடத்தவில்லையென உயிரிழந்த பெண்ணின் கணவர் தெரிவித்தார்.

பண்டிகையின் போது மதுபானம் விற்க ஹோட்டல், உணவகங்களுக்கு அனுமதியில்லை

நத்தார் பண்டிகையின் போது ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் ஊடாக மதுபானம் விற்பனை செய்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்படவில்லையென கலால் ஆணையாளர் கபில குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

நத்தார் தினத்தன்று சுற்றுலா சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தங்குமிட வசதிகள் கொண்ட ஹோட்டல்களில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு மாத்திரமே மதுபானம் வழங்குவதற்கு கடந்த காலங்களில் அனுமதி வழங்கப்பட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும் சுற்றுலா ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களுக்கு நத்தார் தினத்தன்று மதுபானம் வழங்குவதற்கு அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுத்து வருகின்ற நிலையில் இது தொடர்பாக இதுவரையில் எவ்வித கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்படாததுடன் எஇது தொடர்பாக இதுவரை தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

நிவாரணம் வேண்டுமென பால்மா இறக்குமதியாளர் சங்கம் கோரிக்கை

டொலர் தட்டுப்பாட்டால் பால்மா இறக்குமதிக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் தமக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென கோரி பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருக்கு கடிதம் ஒன்றினை எழுதியுள்ளது.

இந்நிலையில் டொலர் தட்டுப்பாடு காரணமாக 50 சதவீதமான பால்மாக்களையே இறக்குமதி செய்ய முடிவதாகவும் டொலர் தட்டுப்பாட்டிற்கு தீர்வு வழங்கப்படும் வரையில், இறக்குமதி செய்யப்படும் பால்மாவிற்கு தட்டுப்பாடு நிலவுமெனவும் பால்மா இறக்குமதியாளர்கள் சங்கத்தரப்பினர் தெரிவித்தனர்.

அத்துடன் இறக்குமதி செய்யப்படும் பால்மாக்களின் விலைகளில் மீண்டும் திருத்தம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அத்தரப்பினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், நாட்டில் நிலவும் டொலர் பிரச்சினையினால் இறக்குமதிகள் மேலும் மட்டுப்படுத்தப்படும் என நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று முன் தினம் இடம் பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

40 இற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சியுடன் பேச்சு

அரசாங்கம் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை கொண்டிருந்தாலும் உள் கட்சிப் பூசல்களால் சிக்கித்தவிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் தற்போதுள்ள ஆட்சியை மாற்ற வேண்டும் என்பதே ஆளும் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்களின் கருத்து என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்நிலையில் ஆளும்தரப்பில் உள்ள 40இற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும்

அரசாங்கத்தின் தற்போதைய செயற்பாடுகளால் விரக்தியடைந்துள்ள ஆளும் கட்சி உறுப்பினர்கள், தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களுக்கு செல்ல வெட்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உரங்களை இறக்குமதி செய்ய தனியார் துறை அச்சப்படுகின்றது

- இராஜாங்க அமைச்சர் துமிந்த-

இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்கு தனியார் துறைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும், அவற்றை விற்பனை செய்ய முடியாதென்ற அச்சத்தில் குறித்த நிறுவனங்கள் இரசாயன உரங்களை இறக்குமதி செய்ய தயங்குவதாக இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

உரப் பிரச்சினை தொடர்பில் அனுராதபுரம் - திறப்பனை - உலங்குளம விவசாயிகள் அமைப்பின் பிரதிநிதிகளுடன் நேற்று முன் தினம் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்து அவர் மேலும் பேசுகையில்:

உரம் கிடைக்காமல் விவசாயிகள் கடும் சிரமத்திற்கு ஆளாவதாக முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

இது இவ்வாறிருக்க பொலன்னறுவை, ஹிங்குராக்கொட மற்றும் ஹொரவபொத்தானை ஆகிய பிரதேசங்களில் அரசாங்கத்தினால் வழங்கப்படும் சேதன திரவ உரம் தரமற்றது என விவசாயிகள் முறையிட்டுள்ளனர். இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்கு தனியார் துறைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் அவற்றை விற்பனை செய்ய முடியாதென்ற அச்சத்தில் குறித்த நிறுவனங்கள் இரசாயன உரங்களை இறக்குமதி செய்யத் தயங்குகின்றனர் என்றார்.

சிங்கராஜ வனத்தில் காணாமல் போன இரு பெண்கள்; கண்டுபிடிப்பு

சூரியகந்த பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிங்கராஜ வனத்தின் அளுத் இல்லம பகுதியில் ஏலக்காய் பறிக்கச்சென்று காணாமல் போன இரண்டு பெண்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

பனி மூட்டம் காரணமாக பாதை மாறி காணாமல் போயிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

39 மற்றும் 40 வயதுடைய தெபரன் சைட் இத்தகந்த பிரதேசத்தில் வசிக்கும் இரு பெண்களே கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் காணமல் போயுள்ளதாகவும் இது குறித்து நேற்று முன் தினம் முறைப்பாடு செய்யப்பட்டதாகவும் சூரியகந்த பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

காணாமல் போன பெண்களை தேடும் பணியில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸ் விஷேட அதிரடிப்படையினர் அப்பகுதி மக்களின் உதவியுடன் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

கொரோனா இறப்பு வீதம் குறைய தடுப்பூசியே காரணம்

கொரோனா தொற்றினால் ஏற்படும் இறப்பு வீதம் நாட்டில் குறைவாக இருப்பதற்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையே காரணமென பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

எனினும் தடுப்பூசியை செலுத்திய பின்னரும் சுகாதார வழிகாட்டுதல்களை பொது மக்கள் பின்பற்ற வேண்டியது அவசியமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கொரோனா தடுப்பூசியை நாட்டு மக்கள் செலுத்துவதுடன் மட்டுமன்றி கொரோனா தொற்றினை கட்டுப்படுத்த அதிகாரிகள் எடுக்கும் நடவடிக்கைக்கு ஆதரவு வழங்க வேண்டுமென்றும் தலைவர் உபுல் ரோஹன குறிப்பிட்டுள்ளார்.

இந்நின் மூலமே சிறுவர்கள் உட்பட தத்தமது குடும்ப உறுப்பினர்களை தொற்று நோயில் இருந்து காப்பாற்ற முடியும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாநகர பாதீட்டு கூட்டம் எப்போது கஜேந்திரகுமார் எம்.பிக்கு தெரியாதாம்?

யாழ்.மாநகர சபை வரவு- செலவு திட்டம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம நேற்று வரையில் எதுவும் அறிந்திராத வகையில் உள்ளாரா? எனும் சந்தேகம் எழுந்துள்ளது.

யாழில் நேற்றையதினம் செவ்வாய்க்கிழமை ஊடகவியலாளர்களை சந்தித்த போது, நாளைய (இன்றைய) தினம் புதன்கிழமை யாழ்.மாநகர சபையில் , முதல்வரால் சமர்ப்பிக்கப்படவுள்ள 2022 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவு திட்டம் தொடர்பில், தங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பி இருந்தார்.

அதன் போது கஜேந்திரகுமார், அருகில் இருந்த சக நாடாளுமன்ற உறுப்பினரான செ.கஜேந்திரனிடம், அந்த வரவு- செலவுத்திட்டம் எப்ப வருகுது ? என வினாவினார். அதற்கு சக நாடாளுமன்ற உறுப்பினர் செ கஜேந்திரன் நாளைக்கு என பதிலளித்தும் , நாளைக்காக? நாளைக்கு உங்களுக்கு தெரியும் என பதிலளித்தார்.

யாழ்.மாநகர சபை வரவு செலவு திட்டம் தோற்கடிக்கப்பட்டு , தற்போதைய முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணனை முதல்வர் பதவியில் இருந்து நீக்க சில மாநகர சபை உறுப்பினர்கள் காய் நகர்த்தல்களை முன்னெடுப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகி வருவதுடன் , அது தொடர்பில் பலரும் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

அந்நிலையிலே மாநகர சபை பாதீட்டு கூட்டம் எப்போது என்பதனை அறியாத நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் உள்ளார்.

இதே வேளை அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் யாழ்.மாநகர சபையில் 13 உறுப்பினர்கள் உள்ள நிலையில், யாழ்.மாநகர சபை முதல்வர் உள்ளிட்ட 10 உறுப்பினர்கள் ஒரு அணியாக செயற்பட்டு வரும் நிலையில் , மூன்று உறுப்பினர்கள் முதல்வருக்கு எதிராக செயற்பட்டு வருகின்றனர். என்பதும் குறிப்பிடத்தக்கது. (40)

மேலும் 335 பேர் குணமடைந்தனர்

கொரோனா தொற்றில் இருந்து மேலும் 335 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இதுவரை கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 545,768 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 573,649 அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சீன உர நிறுவனத்திற்கு 6.7 மில்லியன் செலுத்த அரசு முடிவு

- இராஜாங்க அமைச்சர் சஷிந்திர ராஜபக்ஷ-

சீன உர நிறுவனத்திற்கு 6.7 மில்லியன் அமெரிக்க டொலரை சட்ட மாஅதிபரின் ஆலோசனைக்கு அமைவாக செலுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சீனாவிலிருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட உரத்தில் சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் பக்றீரியாக்கள் இருந்தமை உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் இலங்கை அதனை நிராகரித்தது.

இதையடுத்து, தமது உரத்தில் அவ்வாறான பக்றீரியாக்கள் கிடையாது எனவும், இரு நாடுகளும் ஏற்றுக்கொண்ட சர்வதேச ஆய்வு நிறுவனமொன்றுக்கு செல்ல வேண்டும் எனவும் சீனா கூறி வந்தது.இவ்வாறான இழுபறிக்கு மத்தியில் இலங்கைக்கு உரத்தை கொண்டு வந்த கப்பல், சுமார் 70 நாட்கள் இலங்கை கடற்பரப்பில் தரித்து நின்றது.

எனினும், இலங்கை குறித்த உரத்தை தொடர்ச்சியாக நிராகரித்து வந்த பின்னணியில் குறித்த சீன உர நிறுவனம் மத்தியஸ்த சபைக்கு செல்வதாக தெரிவித்துடன் கடந்த 4ம் திகதி இலங்கை கடற்பரப்பிலிருந்து கப்பலை வெளியேற்றியது.

இவ்வாறான நிலையிலேயே குறித்த உர நிறுவனத்திற்கு 6.7 மில்லியன் அமெரிக்க டொலரை செலுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை தர நிர்ணயத்துக்கு அமைவாக உரத்தை மீள் உற்பத்தி செய்யுமாறு அந்நிறுவனத்திடம் கோரப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீரங்கம் ரங்கநாதர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்ற சொர்க்கவாசல் திறக்கும் நிகழ்வு

வரலாற்றுச் சிறப்பு மிக்க ஸ்ரீ ரங்கநாதர் ஆலயத்தில் ஒவ்வொரு வருடமும் இடம்பெறும் முக்கிய நிகழ்ச்சியான சொர்க்கவாசல் திறப்பு விழா, நேற்று அதிகாலை 4.45 மணிக்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வை முன்னிட்டு, அதிகாலை 3.30 மணிக்கு ரங்கநாதப் பெருமான் மூலஸ்தானத்திலிருந்து இரத்தின அங்கி, பாண்டியன் கொண்டை, கிளி மாலை உட்பட பல்வேறு திருஆபரணங்கள் அணிந்து, சொர்க்கவாசல் எனப்படும் பரமபதவாசலைக் கடந்து சென்றார். வரலாற்றுச் சிறப்பு மிக்க ஸ்ரீ ரங்கம் சுவாமி ஆலயத்தில், வைகுண்ட ஏகாதசி திருவிழா வழக்கமாக மார்கழி மாதத்தில் இடம்பெறுகின்றது. 19 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டும் கார்த்திகை மாதத்தில், வைகுண்ட ஏகாதசி விழா நடத்தப்பட்டு சொர்க்க வாசல் திறக்கப்படுகின்றது. அதன்படி, இந்த ஆண்டு கார்த்திகை மாதத்தில், ஸ்ரீ ரங்கேஸ்வரர் ஆலயத்தில் வைகுண்ட ஏகாதசி விழா கடந்த 3 ஆம் திகதி திருநெடுந்தாண்டகம் நிகழ்ச்சியுடன் ஆரம்பமானது. பகல்பத்து உற்சவத்தின் போது, தினமும் ரங்கநாதப் பெருமான் ஒவ்வொருவிதமான அலங்காரத்தில் அர்ச்சுன மண்டபத்தில் எழுந்தருளி, பக்தர்களுக்கு அருள்பாலிப்பது வழக்கமான நிகழ்வாகும். பகல்பத்து உற்சவத்தின் 10-வது நாளான நேற்று, நம்பெருமாள் நாச்சியார் திருக்கோலம் எனப்படும் மோகினி அலங்காரத்தில், எழுந்தருளி பக்தர்களுக்கு திருவருள் பாலித்தார். ஸ்ரீ ரங்கேஸ்வரப் பெருமானின் சொர்க்கவாசல் திறக்கும் நிகழ்வு இடம்பெறும் நாளில், இங்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

குஜராத் மாநிலத்தில் மேலுமொருவருக்கு ஒமைக்ரோன் தொற்று உறுதி

தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு வருகை வந்த குஜராத்தை சேர்ந்த நபருக்கு ஒமைக்ரோன் தொற்று உறுதியானதைத் தொடர்ந்து, அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குஜராத் மாநிலத்தில், ஏற்கனவே ஒமைக்ரோன் தொற்றினால், 4 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மேலும் ஒருவருக்கு ஒமைக்ரோன் தொற்றிருப்பது உறுதியாகியுள்ளது.இதனால், குஜராத்தில் ஒமைக்ரோன் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 ஆக உயர்ந்துள்ளது. தென் ஆப்பிரிக்காவிலிருந்து, கடந்த வாரம் டெல்லிக்கு வந்த நபருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. ஓரிரு நாட்கள் இடைவெளியின் பின்னர், அஹமதாபாத்தில் இரண்டாவது முறையாக கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. ஆனால், இந்த இரண்டு சோதனைகளிலும், நேர்மறையான முடிவு பெறப்பட்டது.

அதன் பின்னர் கொரோனா தொற்று அறிகுறிகள் தெரிந்த நிலையில், மூன்றாவது முறையாக பரிசோதனை செய்த போது, குறித்த நபருக்கு ஒமைக்ரோன் தொற்றிருப்பது, உறுதியானது. இதனையடுத்து, சம்பந்தப்பட்ட நபர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவைப் பொறுத்தவரை, கர்நாடகா, மகாராஷ்டிரா, ராஜஸ்தான், குஜராத், டெல்லி, கேரளா உள்ளிட்ட மாநிலங்களில், ஒமைக்ரோன் வைரஸ் ஏற்கனவே பரவ ஆரம்பித்து, தொற்று எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

புதிதாக 5 ஆயிரத்து 784 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி

இந்தியாவில் புதிதாக 5 ஆயிரத்து 784 பேருக்கு, கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன்படி கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை, 3கோடியே 47 இலட்சத்து, 3 ஆயிரத்து 644 ஆக அதிகரித்துள்ளது.

இதற்கிடையில், கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து, 7 ஆயிரத்து 995பேர் ஒரே நாளில் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இதற்கமைய குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை, 3 கோடியே 41 இலட்சத்து 38 ஆயிரத்து 763 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றினால் நேற்று முன்தினம் காலையுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில், 252 பேர் உயிரிழந்துள்ளதைத் தொடர்ந்து, மொத்த உயிரிழப்புக்களின் எண்ணிக்கை 4 இலட்சத்து, 75 ஆயிரத்து 888 ஆக உயர்ந்துள்ளது.

இந்நிலையில், கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள, 88 ஆயிரத்து 993 பேர், பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

-339 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட-

காசி விஸ்வநாதர் ஆலய வளாகத்தினை திறந்து வைத்தார் பிரதமர் மோடி

உத்தரப் பிரதேசம் வாரணாசியில், காசி விஸ்வநாதர் ஆலய வளாகத்தை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்துள்ளார். இந்த நிகழ்ச்சியில் பாரதீய ஜனாதாக் கட்சி ஆட்சி செய்யும் 12 மாநிலங்களின் முதல்வர்கள் பங்கேற்றனர்.

பிரதமர் நரேந்திர மோடி வாரணாசியில், பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளார். காசி விஸ்வநாதர் கோயிலுக்குச் சென்று வழிபாடு நடத்தினார் பிரதமர் மோடி, முன்னதாக கங்கையில் புனித நீராடினார் பின்னர் 339 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள, காசி விஸ்வநாதர் ஆலய வளாகத்தின், முதல் கட்டிடத்தையும், அவர் திறந்து வைத்தார். காசி விஸ்வநாதர் ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்கள் நெருக்கடி மிகுந்த தெருக்கள் வழியாக, மோசமான சுற்றுப்புறங்களைக் கடந்து, ஆலயத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது. கங்கையில் நீராடி, புனித நீரை எடுத்துச் சென்று கோயிலில் வழங்குவது தொன்று தொட்டு நடந்து வந்த வழக்கமாகும். இந்த நிலையை மாற்றும் வகையில், காசி விஸ்வநாதர் ஆலய வளாகத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதாவது காசி விஸ்வநாதர் ஆலயத்தையும், கங்கை நதியின் கரைகளையும் இணைக்கும் பாதையை, பக்தர்கள் எளிதில் அணுகும் வகையில்,இந்தத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு 2019-ம் ஆண்டு மார்ச் 8 ஆம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டு நிர்மாணப் பணிகள் ஆரம்பமாகின. இத் திட்டத்தின் அனைத்து நிலைகளிலும் பிரதமர் நரேந்திர மோடி, தீவிர ஆர்வம் காட்டி வந்தார்.

அடிக்கடி ஆய்வுகளை மேற்கொண்டு, ஆலோசனைகளையும் அவர் வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

சிறுவிளம்பரம்

மணமகன் தேவை

1990, யாழிந்து வேளாளர், சதயம், Teacher, திருநெல்வேலி, பதிவு #6849. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர் கூலிஇல்லை. Appointments 076664 9401. www.EQ Marriage Service.com, Ensured Quality Lanka Pvt Ltd., No.91 - 4/2, Galle Road, Bamabalapity, Colombo - 04.

அது கோடிபதி ADA KOTIPATHI

திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1418
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2021.12.13

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,458,980/-

வெற்றி இலக்கங்கள்: 26 56 70 75
ஆங்கில எழுத்து: Z

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி.சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 0112 333 546-47
துரித அழைப்புகளுக்கு: 0114 824 824, 0112 333 778 or 1919
குறுந்தகவல்: DLB<space>LOT<space>SB send 1919
தானியங்கி குரல் சேவையின் பொருட்டு: 0114 825 825
www.dlb.lk

வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

கேள்வி அறிவித்தல்

சபை நிதி வேலைத்திட்டம் – 2021

மன்னார் நகர சபை, மன்னார்.

திட்டத்தின் பெயர் ஒப்பந்த இல.
Construction of Drinage System at Periyakamam Main Road Eluthoor, Mannar. NP/14/42(2)/W/CF/2021/24
Construction of Drainage Channel at 98 Housing Scheme Road, Pallimunai East. NP/14/42(2)/W/CF/2021/25
Construction of Drainage Channel at Al-Az-Har School Behind Road, Uppukulam. NP/14/42(2)/W/CF/2021/26

தலைவர், பெறுகைக்குழு, மன்னார் நகர சபை, மன்னார். தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்கு கோருகின்றார்.

01. தேசிய போட்டிக்கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. இருப்பினும், வடமாகாணத்தின் நிர்வாக எல்லையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது.

02. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, 04/2016(III) இலக்க 18.02.2021ஆம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமானதரத்தில் வீதி மற்றும் வடிகால் அமைப்பிற்கான இக்ராட் (ICTAD) பதிவுள்ளவராகவும், கறுப்புப் பட்டியலில் (Black List) பெயரிடப்படாததுமான கேள்வியாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

03. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர் / செயலாளர், மன்னார் நகர சபை, மன்னார், (தொலைபேசி: 023-2251898, 023-22222351, 023-2222591, மின்னஞ்சல்–mannaruc154@yahoo.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான பூரணமான கேள்விஆவணமொன்றைத் தலைவர் / செயலாளர், மன்னார் நகர சபை, மன்னார், எனும் இடத்தில் 15.12.2021 ஆம் திகதியிலிருந்து 29.12.2021 ஆம் திகதிவரை அலுவலக வேலை நாட்களில் காலை 09.00 மணிக்கும் 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000.00 (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

05. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர்/செயலாளர், மன்னார் நகர சபை, மன்னார், எனும் முகவரிக்கு 29.12.2021ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

06. கிடைக்கப்பெற்ற பெறுகைகள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகைக்கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழுத்தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

07. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

கேள்வி எண்	வேலைவிபரம்	மதிப்பீட்டு தொகை (ரூ மில்லியன் (வரி நீங்கலாக)	ஒப்பந்த காலம்	வேண்டப்படும் தரம்	கேள்வி செல்லுபடியாகும் காலம்	வேண்டப்படும் கேள்விப் பிணை	
						பிணை வைப்பு	செல்லுபடியாகும் காலம்
NP/14/42(2)/W/CF/2021/24	Construction of Drinage System at Periyakamam Main Road Eluthoor, Mannar.	3.18	02 Months	C8 and C7 (Road & Drainage)	02.03.2022	32,000.00	30.03.2022
NP/14/42(2)/W/CF/2021/25	Construction of Drainage Channel at 98 Housing Scheme Road, Pallimunai East.	3.44	02 Months	C8 and C7 (Road & Drainage)	02.03.2022	35,000.00	30.03.2022
NP/14/42(2)/W/CF/2021/26	Construction of Drainage Channel at Al-Az-Har School Behind Road, Uppukulam.	2.65	02 Months	C8 and C7 (Road & Drainage)	02.03.2022	27,000.00	30.03.2022

08. கேள்விகோரல் பற்றிய, முன்கூட்டிய கூட்டம் 23.12.2021ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு மன்னார் நகர சபை, அலுவலகத்தில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்தச் செலவில் கலந்து கொள்ளமுடியும்.

தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு,
மன்னார் நகரசபை, மன்னார்,
14.12.2021

ஜயோதா ஜயோதா Jayoda

திகதி : 2021-12-13
வெற்றி வாரம் : 1793 | வர்ணம் : மஞ்சள்

சுப்பர் ஜக்பொட் ரூ. 28,740,092/-

வெற்றி இலக்கங்கள்: 10 33 47 59
ஆங்கில எழுத்து: U

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,478,580/-
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 28,867,628/-

6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர் www.dlb.lk
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
தொலைபேசி: 0112 333546-47 துரித அழைப்பு: 0114 824 824
மொத்தர் முடிவுகளுக்கான துரித அழைப்பு: 011 2 333 778
ஐ வி ஆர் இலக்கம் : 011 4 825 825

ராசி அதிர்ஷ்டம்

திகதி : 2021-12-13
வெற்றி வாரம் : 3304
வர்ணம் : மஞ்சள்

சுப்பர் ஜக்பொட் ரூ. 3,355,906/-

6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வெற்றி இலக்கங்கள்: 02 32 34 43
ரிஷபம்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர் www.dlb.lk
அபிவிருத்தி லொத்தர் சபை

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,565,400/-

சனிதா சனிதா-Shanida

திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2021.12.13
சீட்டிழுப்பு இல: 3753
வர்ணம்: நீலம்

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.3,889,000/-

வெற்றி இலக்கங்கள்: 07 36 41 62
ஆங்கில எழுத்து: N

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி.சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 0112 333 546-47
துரித அழைப்புகளுக்கு: 0114 824 824, 0112 333 778 or 1919
குறுந்தகவல்: DLB<space>LOT<space>SB send 1919
தானியங்கி குரல் சேவையின் பொருட்டு: 0114 825 825
www.dlb.lk

வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL சுபர் போல் சுப்பர் போல்

சீட்டிழுப்பு வாரம் 1592 | நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2021.12.13 | தினம் திங்கட்கிழமை

வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: B 16 20 26 63

வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,162,740/-

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
சீட்டிழுப்பு பெறுபேறுகளுக்கான இணையத்தளம்: www.dlb.lk
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 0112 333 546-47
துரித அழைப்புகளுக்கு: 0114 824 824, 0112 333 778 or 1919
குறுந்தகவல்: DLB<space>LOT<space>SB send 1919
தானியங்கி குரல் சேவையின் பொருட்டு: 0114 825 825

எரிவாயுக் கசிவினால் கோர விபத்து குறைந்தது ஏழு பேர் பலி

-இத்தாலியில் நடந்த பயங்கரம்-



இத்தாலியின் சிசிலி நகரில், எரிவாயுக் கசிவு என்று சந்தேகிக்கப்படும் விபத்தில், நான்கு கட்டடங்கள் இடிந்து வீழ்ந்தன. இதனைத் தொடர்ந்து நடந்த மீட்பு பணியில், நான்கு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

சனிக்கிழமை மாலை ரவனுசா விலுள்ள சிசிலி நகரில் நான்கு குடியிருப்புக் கட்டடங்களில் நடந்த இந்த விபத்தில்,இது வரை குறைந்தபட்சம் ஏழு பேர் உயிரிழந்துள்ளதாகவும், மேலும், காணாமல் போனதாகக் கூறப்படும் இரண்டு பேரை, மீட்புப் பணியாளர்கள் தொடர்ந்தும், தேடி வருவதாகவும் தீயணைப்பு வீரர்கள் கூறியுள்ளனர்.

இந்த வெடி விபத்துக் காரணமாக, 100இற்கும் அதிகமானோர், தங்கள் வீடுகளை விட்டு வெளியேறும் நிலை, ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்திற்கான காரணம் குறித்து, விசாரணைகள் இடம் பெற்று வருகின்றது.

ஆனால்,இந்த விபத்திற்கு எரிவாயுக் கசிவு காரணமாக இருக்கலாமென அதிகாரிகள் நம்புகின்றனர்.பல நாட்களாக தீவிரமான எரிவாயுவின் வாசனை வந்ததாக, அங்கு குடியிருப்பவர்கள் கூறியுள்ளனர். ஆனால், ஏற்பட்டுள்ள கசிவு குறித்து தங்களுக்கு எந்தப் புகாரும் வரவில்லையென, சம்பந்தப்பட்ட எரிவாயு நிறுவனமான இடால்காஸ் (Italgas) கூறியுள்ளது.

பிரான்ஸின் ஒரு பகுதியாக தொடர்ந்து இருப்பதற்கு ஆதரவாக வாக்களித்த கலிடோனியர்கள்

நியூ கலிடோனியாவின் பசிபிக் பிரதேசத்தில் வசிப்பவர்கள், பிரான்ஸின் ஒரு பகுதியாக இருப்பதற்கு அதிகளவில் வாக்களித்தனர். பிரான்ஸ் நிலப்பகுதியிலிருந்து தனித்திருக்கும் பல்வேறு தீவுகளை உள்ளடக்கிய பிராந்தியமான நியூ கலிடோனியா, பிரான்ஸிடமிருந்து சுதந்திரம் பெறுவதற்காக மூன்றாவது வாக்கெடுப்பை எதிர்கொண்டது. ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வாக்கெடுப்பில், பெரும்பாலான பொதுமக்கள், பிரான்சுடன் ஒன்றிணைந்து இருப்பதற்கே, வாக்களித்தனர். 90.23 சதவீதமான வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில், 96.32 சதவீதமான வாக்காளர்கள் சுதந்திரம் தேவையில்லையென, வாக்களித்துள்ளனர். நியூ கலிடோனியா பிரான்ஸ் மொழியாகவே இருக்குமென்று, பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் தெரிவித்துள்ளார். மேலும், கலிடோனியர்கள் தாம் தொடர்ந்து பிரெஞ்சுக்காரர்களாக இருப்பதற்குத் தீர்மானித்துள்ளனர்.அவர்கள் அதனை சுதந்திரமாக முடிவு செய்துள்ளதாகவும், கூறியுள்ளார்.

2021 ஆம் ஆண்டிற்கான சிறந்த நபராக எலான் மஸ்க் தெரிவு

2021ஆம் ஆண்டிற்கான சிறந்த நபராக, டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் தலைமைச் செயலதிகாரி எலான் மஸ்க், தெரிவு செய்யப்பட்டுள்ளார். அமெரிக்காவின் பிரபல டைம்ஸ் மாத இதழ், ஆண்டுதோறும் சிறந்த நபரை தெரிவு செய்து கௌரவித்து வருகிறது.

மின்சார கார் விற்பனையில், டெஸ்லா நிறுவனம் இந்த வருடம் போர்ட் உள்ளிட்ட நிறுவனங்களை பின்னுக்குத் தள்ளியது. எலான் மஸ்க் இந்த விருதைப் பெறுவதற்கு காரணமாக கருதப்படுகின்றது.

அத்துடன், அவருடைய ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம், விண்வெளிச் சுற்றுலாவை வெற்றிகரமாக நடத்தியிருந்தது.மேலும், கொரோனா தடுப்பூசிகளைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகளை 2021ஆம் ஆண்டின் கதாநாயகர்களாகவும், அமெரிக்காவைச் சேர்ந்த ஜிம்னாஸ்டிக் வீராங்கனை சிமோன் பைல்ஸ், சிறந்த விளையாட்டு வீரராகவும், டைம்ஸ் பத்திரிகை தெரிவு செய்துள்ளது.

இந்தோனேசியாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்



இந்தோனேசியாவின் கிழக்குப் பகுதியில், 7.4 ரிச்டர் அளவு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

புளோரஸ் தீவிற்கு அருகே ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தினைத் தொடர்ந்து,இந்தோனேசியாவில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இன்று (செவ்வாய்க்கிழமை) காலை 11:20 மணியளவில், புளோரஸ் கடலில் 76 கிலோமீற்றர் (47 மைல்) ஆழத்தில், நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்தோனேசியாவின் புளோரஸ் தீவிலுள்ள,மௌமரேக்கு வடக்கே 91 கிலோமீற்றர் (56 மைல்) தொலைவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த வருடம் மே மாதம், இந்தோனேசியாவின் சுமத்ரா தீவின் வடமேற்கு கடற்கரையில், 6.6 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்நிலையில், நிலநடுக்கத்தினால் இலங்கைக்கு எவ்வித பாதிப்பும் இல்லையென, புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது. எனினும், நிலநடுக்கம் தொடர்பான நிலைமையினை, உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்தோனேசியாவில் நேற்று முற்பகல் காலை 11.20 மணியளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது ரிச்டர் அளவுகோலில், 7.6 ஆகப் பதிவாகி உள்ளதாக, அமெரிக்காவின் புவியியல் ஆய்வு மையம் (யு.எஸ்.ஜி.எஸ்) தெரிவித்துள்ளது.

இறுதியாக 2004ஆம் ஆண்டு, இந்தோனேசியாவில் ஏற்பட்ட பாரிய நிலநடுக்கம் சுனாமியைத் தூண்டியது. டிசம்பர் 26ஆம் திகதி, வடமேற்கு சுமத்ரா கடற்கரையில் ஏற்பட்ட 9.1 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம், இந்தோனேசியா, இலங்கை, இந்தியா, தாய்லாந்து மற்றும் 9 நாடுகளில் 2,30,000இற்கும் அதிகமான மக்களின் உயிர்களைக் காவு கொண்டமை குறிப்பிடத்தக்கது.

பள்ளத் தாக்கில் கவிழ்ந்தது பேருந்து 18 பேர் ஸ்தலத்தில் பலி

ஈக்குவடோர் நாட்டிலுள்ள பள்ளத்தாக்கொன்றில், பேருந்து கவிழ்ந்து விபத்திற்குள்ளாகியுள்ளது.இந்தச் சம்பவத்தில்,18 பேர் சம்பவ இடத்திலேயே, பரிதாபமாக உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தென் அமெரிக்காவிலுள்ள ஈக்குவடோர் நாட்டின் தெற்குப் பகுதியிலுள்ள, மொரோனா சாண்டியாகோ மாகாணத்தின் சுகுவோ நகரிலிருந்து 40இற்கும் மேற்பட்ட பயணிகளுடன் பேருந்தொன்று புறப்பட்டுச் சென்றது. ஹுவாம்பி நகரிலுள்ள மக்காஸ்-லோஜா நெடுஞ்சாலையில், பேருந்து அதிவேகத்தில் சென்று கொண்டிருந்தது. அப்போது சற்றும் எதிர்பாராத வகையில், பேருந்து திடீரெனக் கட்டுப்பாட்டை இழந்தது.

அதிவேகமாக பேருந்து வீதியை விட்டு நகர்ந்து சென்ற போது, பயணிகள் அனைவரும் பயத்தில் மரண ஓலமிட்டுக் கதறியதாக,அப்பகுதியில் நின்றவர்கள் தெரிவித்துள்ளனர்.இந்நிலையில், சாரதி பேருந்தை நிறுத்துவதற்கு, முயற்சி செய்த போதும், ஆனால் அவரது முயற்சி பலனளிக்கவில்லை. இதனைத் தொடர்ந்து, பேருந்தானது, சாலையை விட்டு விலகி, அருகிலிருந்த பள்ளத்தில் கவிழ்ந்தது.இதனால், அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. சாலையில் சென்று கொண்டிருந்த சக வாகனச் சாரதிகள் விரைந்து சென்று, மீட்புப் பணியில் ஈடுபட்டனர். எவ்வாறெனினும்,18 பேர் ஸ்தலத்திலேயே பலியாகினர்.

பூஸ்டர் தடுப்பூசியைப் பெறுவதற்கு அரை மில்லியன் மக்கள் முன்பதிவு



பிரித்தானியாவில் சுமார் அரை மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தங்கள் கொவிட் பூஸ்டர் தடுப்பூசிக்கு, முன்பதிவு செய்துள்ளதாக, பிரதமர் பொரிஸ் ஜோன்ஸன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் டிசம்பர் 31ஆம் திகதிக்குள் 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் பூஸ்டர்கள் வழங்கப்படுமென உறுதியளித்த ஒரு நாளுக்குப் பின்னர், பொரிஸ் ஜோன்சன் இந்த எண்ணிக்கையை வெளிப்படுத்தினார்.

நேற்று (திங்கட்கிழமை) தடுப்பூசித் தளங்களில் நீண்ட வரிசைகளில் பலர் காத்திருந்தார். சிலர் தடுப்பூசி பெறுவதற்கு ஐந்து மணிநேரம் காத்திருந்தனர்.

பிரதமர் மற்றும் தேசிய சுகாதாரச் சேவையினர், இப்போது தன்னார்வத் தொண்டர்களை, தடுப்பூசி மையங்களை இயக்குவதற்கு உதவுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அடுத்த வாரத்தில், காற்பந்து மைதானங்கள், வணிக வளாகங்கள் மற்றும் பொழுதுபோக்கு மையங்கள் உட்பட நாடு முழுவதும் நூற்றுக் கணக்கான தடுப்பூசி தளங்கள், நடமாடும் சேவை நிலையங்களிலும், தடுப்பூசி மையங்களை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

நாற்திசையிலும் நாளும் பொழுதும் கதைத்து மகிழ

TRIPLE BLASTER

இப்போது புதுப்பொழிவுடன்!

Dialog முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு

எந்தவொரு வலையமைப்பிற்கும்*
1000 நிமிடங்கள்
1000 SMS
Anytime
Data 1.5GB

மாதத்திற்கு
ரூ.498/-
(மேலதிக வரிகள் இல்லை)

செயற்படுத்திக்கொள்ள ரூ.498/- ஐ ரீலோட் செய்யுங்கள் அல்லது #678# டயல் செய்யுங்கள்

twitter.com/dialoglk facebook.com/dialog.lk *நிபந்தனைகளுக்கு உட்பட்டது TRC/D/PRO/21/09

SLIM AWARDS 2021
உங்களுக்கு கொண்டு வருவது
ஆண்டிற்கான தொலைத்தொடர்பு வர்த்தக நாமம்
ஸ்லிம் மக்கள் விருதுகள் 2021

an axiata company www.dialog.lk

Dialog
எதிர்காலம் இன்றே.

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 7388 307 / 021 222 3735
021 222 4077
advyarlthinakkural@gmail.com

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.